பக்கங்கள் : 20
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி சங்குநாதம்

சங்கு 23
ஒலி 329 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 27 ஞாயிற்றுக்கிழமை (13.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

EDUS
Learning made lovable
சிறந்த ஒன்லைன்
கல்விக்கான நிரந்தர தீர்வு...!
தரம் 1 - G.C.E A/L வரை
Professional Courses for Beginners
(C-5252)
www.edus.lk | 0777 123 330

## கோட்டாவுக்கு ஐ.நாவில் மிக முக்கிய பதவி?



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இலங்கையின் தூதரக சேவையில் பணி ஒன்றை வழங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக தெரியவருகிறது.

தன்னை ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியாக நியமிக்குமாறு அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களிடம் அண் ▷19

## நாட்டை நாசமாக்கியவர்கள் வெளியே தடுக்கப் போராடியவர்கள் உள்ளே

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சீற்றம்



(கொழும்பு)

பொருளாதாரத்தை நாசமாக்கிய கப்ரால் புத்தகங்களை எழுதுகின்றார் என்றும் நாட்டை மீட்பதற்காக முன்வந்த இளைஞர்கள் கைதுசெய்யப்படுகின்றனர் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தொடம்கஸ்லந்த தேர்தல் தொகுதி கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற் ▷19

### அரசியல் தீர்வு தொடர்பில்

# ஜனாதிபதியுடன் பேச கூட்டமைப்பு தயார்

### பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

**தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்த தாம் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.**


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 10 ஆம் திகதி வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் அடுத்த வாரம் முதல் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக குறிப்பிட்ட விடயத்துக்கு தமிழர் தரப்பில் இருந்து எதிர்வினைகள் வந்துள்ளன.

இதன் அடிப்படையில் ரணிலுடன் அடுத்த வாரம் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் பங்கேற்கவுள்ள ▷19

### போதைக்கு அடிமை

## பிளேட்டால் கையை வெட்டிய மாணவன்

### கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

பாடசாலை மாணவன் ஒருவர் தனது கையை பிளேட்டால் வெட்டிக் கொண்ட சம்பம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள பாடசாலை ஒன்றில் ▷19

## குழந்தையை தாக்கிய தந்தை நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

குழந்தையை மூர்க்கத்தனமாக தாக்கியதுடன், அதனை வீடியோ பதிவு செய்து சமூக வலைத் தளத்தில் பதிவிட்ட தந்தை நேற்றுக் காலை யாழ். நகரில் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

3 வயதுக் குழந்தை மூர்க்கத்தனமாக தாக்கப்படும் காணொளி சமூக வலைத்தளங்களில் கடந்த ஒரு வாரத்துக்கு ▷19

## அனைத்துப் பேருந்துகளும் புளியங்குளத்தில் சோதனை

(வவுனியா)

யாழ். கொழும்பு பேருந்து சேவைகளின் போது விபத்துகள் கூடுதலாக இடம்பெறுவதால் வடமாகாண ஆளுநரின் வழிகாட்டுதலுக்கமைய சகல பேருந்துகளையும் புளியங்குளத்தில் 15 நிமிடங்கள் தரித்துச் செல்ல வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதியுடன் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் திடீர் பரிசோதனை அதிகாரிகள் மற்றும் பொலிஸா ▷19

## நாட்டை கட்டியெழுப்பும் வகையில் 2023 வரவு - செலவுத் திட்டம்

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

மொத்த சனத்தொகையில் 68 வீதமானோர் நிவாரணம் கோரும் சூழ்நிலைக்கு மத்தியில் 2023 ஆம்ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நாளை திங்கட்கிழமை நாட்டு நலன் மற்றும் நாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கில் முன்மொழிவுகள் முன்வைக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் ▷19

### வடக்கு மாகாண

## உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக தெய்வேந்திரம்?

(யாழ்ப்பாணம்)

வடமாகண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக கே. தெய்வேந்திரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் பணிப்புரையின் பேரில் டிசம்பர் ஓய்வு பெறும் வயது வரை உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக கடமையாற்றுவார். (4-7)

## முருகன் விடுதலையில் தாமதம்

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றிருந்த நளினி, முருகன், சாந்தன், ▷19

## அரசியல் கைதிகளுக்கு தலா 2.5 மில். நிதியுதவி

### லைக்கா நிறுவனம் வழங்கியது




▷19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## Pharmacist தேவை

நெல்லியடியில் திறக்கப்படவிருக்கும் Pharmacy இற்கு Pharmacist licence உள்ள Pharmacist முழு நேர வேலைக்கு தேவை. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 354 3507**

(C-5253)



## வேலை வாய்ப்பு

சுன்னாகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு (Computer Billing) செய்யக்கூடியவர்கள் / பழக விரும்புபவர்கள் தேவை.

**தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.**

**ஆண்கள் மட்டும்**

**தகைமை :** அடிப்படை கணனி அறிவு அவசியம்


**வயதெல்லை :** 20 – 30 வரை

**076 540 4630**

(13434)


## மரண அறிவித்தல்

# இராசையா துரைராசா



**தோற்றம்** 26.09.1938 **மறைவு** 06.11.2022

யாழ்.தாவடியைப் பிறப்பிடமாகவும் கனடா Torontoவை வதிவிடமாகவும் கொண்ட இராசையா துரைராசா அவர்கள் கடந்த 06.11.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா துரையம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ரஜனி (ஜேர்மனி), ரஜிதா (கனடா), ரஜீவன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமார், குகனேஸ்வரன், யுவனா (யாழினி) ஆகியோரின் பாசமிகு மாமாவும் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் செல்வரத்தினம், பாலச்சந்திரன், இராசேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இந்திராசு, இந்திராணி, அழகு ராணி ஆகியோரின் பாசமிகு அண்ணனும் டெனிஷா, ரனிஷா, றெனுசன், றிசாந், றிக்ஷனா, புவியா, றிஷானி, டிலானி ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்,

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: **077 869 7296 (இந்திராசு)**
**077 742 4602 (சி.நிவேதன்)**
**0770195140 (பார்த்தீபன்)**

(13432)

தகவல்:
**பிள்ளைகள்**
**ரஜனி, ரஜிதா, ரஜீவன்**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 14.10.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் அப்பையா தம்பித்துரை

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (13.11.2022) ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.


(13431)

இங்ஙனம்: குடும்பத்தினர்
மகன் - 077 809 3293

## மரண அறிவித்தல்

# வேலன் சுந்தரம்

**தோற்றம்** 12.04.1944 **மறைவு** 10.11.2022



நாவலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலைஞானவாரிதியும் ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளருமான வேலன் சுந்தரம் அவர்கள் 10.11.2022 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராசமணியின் (ஞானாம்பிகை) அன்புக் கணவரும் சசிமாலா, மணிவண்ணன், அன்பரசன், மகிழ்நங்கை, காலஞ்சென்ற நாவேந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அகிலன், ராதா, கமலா, தயாளன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே:-
**077 069 3958**

(C-5251)

தகவல்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு பேரின் விடுதலையை ஏற்றுக் கொள்ள முடியாது

## காங்கிரஸ் கட்சி எதிர்ப்பு

**(டில்லி)**

**ராஜிவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த 6 பேரின் விடுதலை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.**



முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வந்த பேரறிவாளனை கடந்த மே மாதம், 142 ஆவது சட்டப் பிரிவை பயன்படுத்தி உச்ச நீதிமன்றம் விடுதலை செய்தது. இந்நிலையில் இந்த தீர்ப்பை மேற்கோள்காட்டி நளினி, முருகன், சாந்தன், ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 6 பேரை உச்சநீதிமன்றம் நேற்று முன் தினம் விடுதலை செய்துள்ளது.

இந்நிலையில் 6 பேர் விடுதலைக்கு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ஜெய்ராம் ரமேஷ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் தவறானது என்றும் கூறியுள்ளார்.

6 பேர் விடுதலைக்கு எதிராக உறுதியான கருத்தை காங்கிரஸ் கொண்டிருப்பதாக கூறியுள்ள ஜெய்ராம் ரமேஷ், இதனை முற்றிலும் நியாயப்படுத்த முடியாததாகவும் காங்கிரஸ் கருதுவதாக தெரிவித்துள்ளார். (4)

# கப்பல் விபத்தில் சிக்கிய தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்ப வேண்டாம்

## ஐ.நாவிடம் சீமான் கோரிக்கை



(டில்லி)

கப்பல் விபத்தில் சிக்கி வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடாது என ஐ.நா மனித உரிமைகள் அமைப்பிடம் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கப்பல் விபத்தில் சிக்கி வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்ப அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளமை அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறதென தெரிவித்துள்ளார்.

நாட்டைத் துறந்து அகதிகளாகச் சென்ற ஈழத்தமிழர்களை மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்புவதென்பது சிறிதும் மனச்சான்றற்ற பெருங்கொடுமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே ஈழத்தமிழ் மக்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் முடிவை உடனடியாக வியட்நாமிய அரசு கைவிட வேண்டுமென்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (4)

# தப்பியோடிய கைதி மரணம்

(கொழும்பு)

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து தப்பிச் சென்ற சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிகந்தை காட்டில் நிர்க்கதியான நிலையில் காணப்பட்ட சந்தேகநபரை கடந்த 10 ஆம் திகதி பொலிஸாரும் இராணுவத்தினரும் மீட்டுள்ளனர்.

சில தினங்கள் உணவு எதுவுமின்றி இருந்துள்ள சந்தேகநபரை பொலிஸார் பொலநறுவை மருத்துவமனையில் அனுமதித்தனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சந்தேகநபர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

கடுவலை நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த 31 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (4)

# தரம் ஒன்றில் இருந்து மாணவர்களுக்கு ஆங்கிலம்

(கொழும்பு)



தரம் ஒன்றில் இருந்து மாணவர்களுக்கு ஆங்கிலம் பேசும் பழக்கத்தை அதிகரிக்க 2023 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதற்கமைய அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச பாடசாலைகளின் முதலாம் மற்றும் இரண்டாம் தரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 13,500 ஆசிரியர்களை நவம்பர் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்சியளிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்காலத் தேவைக்கு ஏற்ற வகையில் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்கு முன்னுரிமை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். (4)

# பேருந்துக் கட்டணத்தில் மாற்றமில்லை

(கொழும்பு)

டீசலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் பேருந்துக் கட்டண திருத்தத்தில் மாற்றம் இடம்பெறாது என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பேருந்துக் கட்டண திருத்தம் தொடர்பில் எவ்வித உடன்படிக்கைகளும் ஏற்படவில்லை எனவும் இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் ஒக்டோபர் 17 ஆம் திகதி டீசல் விலை ரூபாய் 15 குறைக்கப்பட்டு நேற்று முன்தினம் ரூபாய் 15 உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# பலம் பொருந்திய நாடுகளின் போட்டிக்குள் செல்ல மாட்டோம்

## ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)


உலகின் பலம் பொருந்திய நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் மற்றும் போட்டிகளில் தலையிடுவதற்கு இலங்கைக்கு எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி, தற்போதைய பின்னணியில் இந்து சமுத்திரப் பிராந்தியமானது உயர் அரசியல் மற்றும் பொருளாதார பெறுமதியைப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முதுகலைப் பட்டதாரிகளில் 2022 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய 1619 இளங்கலை பட்டமளிப்பு விழா பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ண இறுதிப்போட்டி இன்று இங்கிலாந்து-பாகிஸ்தான் பலப்பரீட்சை



இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் சம்பியன் கிண்ணத்திற்கான, இறுதிப் போட்டி ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை தூண்டியுள்ளது.

ஒரு மாத காலமாக நடைபெற்று வரும் தொடரின் இறுதிப் போட்டி, இன்று ஞாயிற்றுக்கிழமை மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் இங்கிலாந்து அணிக்கு ஜோஸ் பட்லரும் பர்கிஸ்தான் அணிக்கு பாபர் அசாமும் தலைமை தாங்கவுள்ளனர்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரை பொறுத்தவரை இரு அணிகளுமே கடுமையான அழுத்தங்கள் மற்றும் ஏமாற்றங்களுக்கு மத்தியில் இறுதிப் போட்டியை தொட்டுள்ளன.

அரையிறுதிப் போட்டியில் சிறப்பாக விளையாடிய இங்கிலாந்து அணி, இந்தியா நிர்ணயித்த 168 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை எவ்வித விக்கெட் இழப்பின்றி எட்டிப்பிடித்து இறுதிப் போட்டிக்கு நுழைந்தது.

இதேவேளை, பாகிஸ்தான் அணியை பொறுத்தவரை இந்தியாவிடம் தோல்வி, சிம்பாவேயிடம் அதிர்ச்சி தோல்வி என கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகி, ஏறக்குறைய தொடரிலிருந்து வெளியேறி விட்டது என்ற நிலையில் இருந்த போது, தென்னாபிரிக்கா அணியை, நெதர்லாந்து அணி தோற்கடிக்க, பாகிஸ்தான் அணி, அதிர்ஷ்டவசமாக அரையிறுதிக்குள் நுழைந்தது.

அரையிறுதிப் போட்டியில், பலம் வாய்ந்த நியூஸிலாந்து அணியை தனது ஆரம்ப துடுப்பாட்டத்தை கொண்டு மிரட்டிய பாகிஸ்தான், இலகுவான வெற்றியை பதிவு செய்து இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

கடந்த போட்டிகளில் சோபிக்க தவறியிருந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான அணித்தலைவர் பாபர் அசாம் மற்றும் மொஹமட் ரிஸ்வான் ஆகியோர், நியூஸிலாந்து அணிக்கெதிரான அரையிறுதிப் போட்டியில், 105 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று அணியின் வெற்றியை இலகுபடுத்தினர்.

இரு அணிகளும் இருபது-20 உலகக்கிண்ணத் தொடரை பொறுத்தவரை இரண்டு முறை மோதியுள்ளன.

அதில் இரண்டு போட்டிகளிலுமே இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.


சர்வதேச இருபது-20 போட்டிகளை பொறுத்தவரை இரு அணிகளும் 28 முறை மோதியுள்ளன.

இதில் 18 முறை இங்கிலாந்து அணியும் 9 முறை பாகிஸ்தான் அணியும் வெற்றி பெற்றுள்ளன.

ஒரு போட்டிக்கு முடிவு இல்லை. முன்னதாக, இருபது-20 உலகக்கிண்ணத் தொடருக்கு முன்னோட்டத் தொடராக நடைபெற்ற இரு அணிகளுக்கிடையிலான ஏழு போட்டிகள் கொண்ட தொடரை, இங்கிலாந்து அணி 4-3 என்ற கணக்கில் கைப்பற்றியிருந்தது.

இதுவரை நடைபெற்றுள்ள எட்டு இருபது-20 உலகக் கிண்ணத் தொடரை பொறுத்தவரை 2007 ஆம் ஆண்டு இந்தியா, 2009 ஆம் ஆண்டு பாகிஸ்தான், 2010ஆம் ஆண்டு இங்கிலாந்து, 2012 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள், 2014 ஆம் ஆண்டு இலங்கை, 2016ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள், 2021 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா ஆகிய அணிகள் சம்பியன் கிண்ணங்களை வென்றுள்ளன. (4)

# தேசிய பளுதூக்கல் போட்டி வவுனியாவிற்கு மூன்று பதக்கங்கள்




பளுதூக்கும் போட்டியில் இரண்டு வெண்கல பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று வவுனியா மாவட்டத்திற்கும் பளுதூக்கல் கழகத்திற்கும் மூன்று மாணவிகள் பெருமை சேர்த்துள்ளார்கள்.

இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தால் நவம்பர் மாதம் 10,11 ஆகிய இரு நாட்களும் பொலநறுவையில் நடத்தப்பட்ட தேசிய பளுதூக்கல் சாம்பியன் ஷிப் - 2022 போட்டியில் வவுனியா பளுதூக்கல் கழகத்தைச் சேர்ந்த தி.கோசியா இரண்டாம் இடத்தையும் நி.சுஸ்மிதாகினி மூன்றாம் இடத்தையும் பா.செரோண்யா ஆகியோர் பதக்கங்களை பெற்றுள்ளனர்.

வவுனியா பளுதூக்கல் கழகத்தின் பயிற்றுவிப்பாளர் ஞா.ஜீவனின் நெறிப்படுத்தலில் இம் மாணவிகள் தயார்படுத்தப்பட்டு பளுதூக்கும் போட்டிகளில் பங்குபற்றி பதக்கங்களை பெற்று வவுனியா மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளனர். (4-299)




யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவனான விஜயராஜ் நிவேதன் இவ்வாண்டு நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே போட்டியில் நான்கு போட்டிகளிலும் தங்கப்பதக்கம் வென்று மாகாண விளையாட்டு திணைக்களத்தினால் சிறந்த கராத்தே வீரருக்கான விருதைப் பெற்றார்.

அத்துடன் கடந்த 4,5,6 ஆம் திகதிகளில் கண்டியில் இடம்பெற்ற தேசிய கராத்தே போட்டியில் குமித்தே(சண்டை) போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்றார். (4)

# இந்திய அணியை ரசிகர்கள் தொடர்ந்து ஆதரிக்க வேண்டும்

## சச்சின்



இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட்டின் அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி, இங்கிலாந்திடம் 10 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது குறித்து பல்வேறு தரப்பினரும் விமர்சித்து வருகின்றனர்.

இந்த நிலையில், கிரிக்கெட் மற்றும் திரையுலக பிரமுகர்கள் பலர் இந்திய அணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இந்திய அணியை ரசிகர்கள் தொடர்ந்து ஆதரிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் உண்டு. அதுபோல வாழ்க்கைக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. நம் அணியின் வெற்றியை நம் சொந்த வெற்றியைப் போல் கொண்டாடும்போது, நம் அணியின் தோல்வியையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (4)



யாழ்.மாநகர சபை நடத்தும் "முதல்வர் கிண்ண சதுரங்க சுற்றுப்போட்டி -2022" நேற்று இடம்பெற்ற நிலையில் கணிசமான மாணவர்கள் கலந்து கொண்டு போட்டியில் மிகவும் ஆர்வமாக பங்குபற்றினர்.

இப்போட்டியின் தொடர்ச்சி இன்றும் நடைபெற்று வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (படங்கள்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரந்துபட்ட கூட்டணி அமைக்க தயாராகும் ஐக்கிய தேசியக் கட்சி



(கொழும்பு)

எதிர்காலத் தேர்தல்களில் போட்டியிடும் வகையில் பரந்துபட்ட கூட்டணி அமைப்பதை நோக்கமாகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டு வருகின்றது.

கூட்டணி அமைப்பது குறித்து ஏற்கனவே பல தரப்புக்கள் கலந்துரையாடி வருவதாக அக்கட்சியின் உதவித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பின்னடைவு ஏற்பட்டாலும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல தரமான மற்றும் முற்போக்கான தலைவர்கள் இருப்பதாக கூறினார்.

அரசாங்கத்தை அமைக்கும் அடுத்த கூட்டணியை அமைப்பதில் ஐக்கிய தேசியக் கட்சியே முன்னிலை வகிக்கும் என முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது. எனவே தேர்தலில் வெற்றிபெற தலைவர்களும் கட்சிகளும் கூட்டணி அமைக்க வேண்டும் என்றார். (4)

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

பாணந்துறை பிரதேசத்தில் 2 கிலோ 45 கிராம் கேரளக் கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பாணந்துறை வடக்கு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ரத்வத்த விகாரைக்கு அருகில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் 2 கிலோ 45 கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கைதுசெய்யப்பட்டவர் 26 வயதுடைய ஒருவர் எனவும் அவர் வாதுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் பாணந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பாணந்துறை வடக்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4)

# அரச, தனியார் வங்கிகளில் கடன் வட்டி வீதம் உயர்வு

(கொழும்பு)

இலங்கையில் வங்கிகளில் கடன்பெற காத்திருப்போருக்கு அதிர்ச்சியளிக்கும் வகையிலான தகவலொன்று வெளியாகியுள்ளது.

அதன்படி, நாட்டில் உள்ள அனைத்து பொது மற்றும் தனியார் வங்கிகளும் தங்கள் கடன் வட்டி வீதத்தை மேலும் 4 சதவீதம் உயர்த்தியுள்ளதாக தெரியவருகிறது. அத்துடன், சில வங்கிகளின் கடன் வட்டி வீதம் 32% ஆக உயர்ந்துள்ளது என கூறப்படுகிறது.

இருப்பினும், பொது வங்கிகளுடன் ஒப்பிடுகையில் சில தனியார் வங்கிகளின் கடன் வட்டி விகிதம் குறைவாக உள்ள போதும் கடன் பெறுவதற்கான நிபந்தனைகள் கடுமையாக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை வங்கி வட்டி அதிகரிப்புடன், முழு வங்கி முறையிலும் திருப்பிச் செலுத்த முடியாத கடன்களின் அளவு வேகமாக அதிகரித்து வருவதாக மத்திய வங்கி அறிக்கைகள் காட்டுகின்றன. (4)

# ஐஸ் போதைப்பொருள் விற்ற பிரதான முகவர் கைது

(அம்பாறை)

ஐஸ் போதைப்பொருளை விநியோகித்த பிரதான முகவரான சந்தேகநபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாழைச்சேனை புகையிரத நிலைய வீதிக்கு அருகில் வைத்து சந்தேகநபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் பிறைந்துறைச்சேனை பகுதியைச் சேர்ந்த 18 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேகநபர் வசம் இருந்து 6 கிராம் 500 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் சந்தேகநபர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்றுப் பொருட்களுடன் வாழைச்சேனை பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியுடன் விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (4)

# மெக்சிக்கோவின் புதிய தூதுவரை சந்தித்தார் பிரதமர் தினேஷ்

(கொழும்பு)

மெக்சிக்கோவின் புதிய தூதுவர் ஃபெடரிகோ சலாஸ் நேற்று முன்தினம் கொழும்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்தார்.

பிரதமருக்கும் மெக்சிக்கோவின் புதிய தூதுவருக்கும் இடையிலான கலந்துரையாடலின் போது, மெக்சிக்கோவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக மற்றும் கல்வி ஒத்துழைப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது இலங்கையில் உள்ள இளைஞர்கள் வெளிநாட்டு மொழிகளை கற்றுக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.


'இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஸ்பானிய மொழித் துறைகளை நிறுவுவதற்கு ஆதரவளிக்குமாறு மெக்சிக்கோ தூதுவரிடம் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

லத்தீன் அமெரிக்க சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்துவதற்கு இலங்கைக்கு பெரும் ஆற்றல் இருப்பதாக மெக்சிக்கோவின் புதிய தூதுவர் இதன்போது குறிப்பிட்டார். (4)

# இராசிபலன்


| | | |
|---|---|---|
| 13.11.2022<br>ஐப்பசி 27, ஞாயிற்றுக்கிழமை<br>பஞ்சமி பின்னிரவு 12.01 மணிவரை | திருவாதிரை முற்பகல் 10.14 மணிவரை<br>சுபநேரம் 9.07-10.37 மணிவரை<br>இராகுகாலம் 4.37-6.07 மணிவரை | சந்திராஷ்டமம்<br>மூலம் |

வளவன்




மேஷம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.




கடகம்

பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள்.



துலாம்

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், எதிர்பாராத சில திருப்பங்கள் ஏற்படும் நாள், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.



மகரம்

உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.



ரிஷபம்

வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய திட்டங்கள் கைகூடும், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.



சிம்மம்

உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.



விருச்சிகம்

எதையும் யோசித்துச் செய்வது நல்லது, தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



கும்பம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம்



மிதுனம்

எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறவாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



கன்னி

திறமைகள் வெளிப்படும் நாள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.



தனுசு

அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆனந்தமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம்



மீனம்

உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் பயன்பெறும் வகையில் வாழ வேண்டும்.

# வடக்கு மாகாணத்தில் நீரிழிவு நோயினால் இளைய தலைமுறையினர் அதிக பாதிப்பு

## யாழ்.போதனா மருத்துவ நிபுணர் அரவிந்தன்


**(யாழ்ப்பாணம்)** — கடந்த கொவிட் காலத்திலிருந்து வடமாகாணத்தில் இளைய தலைமுறையினர், குறிப்பாக 20-40 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர், யுவதிகள், ஷ பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணி பெண்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுகிறார்கள் என யாழ். போதனா மருத்துவமனையின் சிறப்பு மருத்துவ நிபுணர் அரவிந்தன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாளை 14 ஆம் திகதி சர்வதேச நீரிழிவு தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் முக்கிய தொனிப்பொருள் என்னவெனில் இளைய தலைமுறையினரை நீரிழிவில் இருந்து பாதுகாத்தல்.

கொழும்பு மாவட்டத்தில் ஏறக்குறைய 30 சதவீதமானோருக்கு நீரிழிவு நோய் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் 15 சதவீதமானோருக்கு நீரிழிவு நோய் இருக்கின்றது.

கடந்த கொவிட் காலத்தில் அதாவது 2,3 வருடங்களாக எமது வடமாகாணத்தில்



இளைய தலைமுறையினர், குறிப்பாக 20-40 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் மத்தியில் நீரிழிவுத் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

இதற்கு முக்கிய காரணம் எமது வாழ்க்கை நடைமுறையில் ஏற்பட்ட மாற்றம். அதாவது ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள். குறிப்பாக மேலைத்தேய உணவுப் பழக்கத்திற்கு அடிமையாதல் முக்கிய காரணம்.

அதேபோல் உடற்பயிற்சி அற்ற வாழ்க்கை முறை இதற்கு முக்கிய காரணம். மன அழுத்தம், தூக்கம் இன்மை போன்ற உளத்தாக்கங்கள் கூட நீரிழிவு நோய்த் தாக்கம் அதிகளவு ஏற்படுவதற்கு முக்கிய மான காரணங்கள்.

எமது வடமாகாணத்தை எடுத்துக் கொண்டால் எத்தனையோ பாடசாலை சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் இருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் உடல் பருமன் அதிகரித்தலாகும். கழுத்துப் பகுதியினை பார்த்தால் கருமை நிறமாக இருக்கும். இது நீரிழிவு வருவதற்கான அறிகுறிகளாகும்.

அதேபோல் பெண்களுக்கு வடமாகாணத்தில் நீரிழிவு நோய் அதிகரித்து வருகிறது. முன்னைய காலகட்டத்தில் பெண்கள் கர்ப்ப காலங்களில் நீரிழிவு நோய்க்கு உள்ளாவது குறைவாக இருக்கின்றது.

ஆனால் இன்று எத்தனையோ கர்ப்பிணி பெண்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படுகின்ற பொழுது அது கர்ப்பிணியை மாத்திரம் அல்ல வயிற்றில் இருக்கும் சிசுவையும் பாதிக்கும். ஆகவே வருமுன் காப்பது அவசியம். பெண்கள் திருமணத்திற்கு முன்னர் உடற்பருமனை உடற்திணிவுச் சுட்டெண் விகிதத்தில் வைத்திருக்க வேண்டும்.

உலகத்தில் 10 செக்கனுக்கு ஒருவர் தனது காலினை இழந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் நீரிழிவு. ஆகவே நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் இன்றியமையாதது என தெரிவித்தார். (4)

# ஆயுர்வேதம் மூலம் அந்நியச்செலாவணி-பிரதமர்



(கொழும்பு)

இலங்கையின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பேணுவதற்கு இலங்கை ஆயுர்வேதத்தை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அரச ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் ஆயுர்வேதம், உலகம் முழுவதும் பிரபலமடைந்துள்ளதாகவும் இந்தத் தொழில் மூலம் அந்நியச் செலாவணியை உருவாக்குவதற்கான முறைமை நடைமுறையில் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அண்டை நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்த பின்னர், நாடு மற்றும் உலகம் முழுவதும் உள்ள உள்ளூர் ஆயுர்வேத மையங்களை திறப்பதன் மூலம் அந்நியச் செலாவணியை உருவாக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயுர்வேத பட்டம் பெற்ற அனைவரையும் இந்த தேசியப் பணியில் தீவிரமாக இணையுமாறு அழைப்பு விடுத்த பிர தமர், ஆயுர்வேத மருத்துவ த்துறை இலங்கையின் மருத் துவத் துறையின் கோட்டை யாக உள்ளது.

அரசாங்க ஆயுர்வேத மருத் துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிகளைப் பாராட்டிய பிரதமர், மருத்துவத் துறையானது ஒரு மருத்துவ முறைக்கு மட்டுப்ப டுத்தப்படவில்லை என்றும் பிரதமர் தெரிவித்தார். (4)

# அபிவிருத்தி லொத்தர் சபையின் விசேட 'அத கோடிபதி' லொத்தர்





(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையின் 'அத கோடிபதி ' லொத்தரின் விசேட சீட்டிழுப்பொன்றின் மூலம் 2022 ஆம் ஆண்டினை மென்மேலும் அதிர்ஷ்டகரமாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் விசேட லொத்தரினை சந்தைக்கு வெளியிடும் நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபையில் அதன் தலைவர் அஜித் குணரத்ன நாரகல தலைமையில் நடைபெற்றது. இவ் விசேட லொத்தர் சீட்டிழுப்பு, வருகின்ற நவம்பர் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

'அத கோடிபதி ' விசேட லொத்தர் மூலம் ஐந்து கோடிக்கு அதிகமான சுப்பர் பரிசுப் பொதியுடன் வழமையான பரிசுகளுக்கு மேலதிகமாக ரூபாய் 100, 000 மற்றும் ரூபாய் 10,000 பணப்பரிசுகள் பலவற்றை வெல்ல வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (4)


31 ம் நாள் நினைவஞ்சலி



எமது கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர்
திரு. பாலசுப்ரமணியம் காந்தரூபன் அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர். கணபதிப்பிள்ளை பாலசுப்ரமணியம் (சிவம்)
அவர்கள் கடந்த 14.10.2022 அன்று சிவபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (13436)
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
Viber 076 636 3378
நாதம் 370



# இலங்கை கிரிக்கெட்டை தலை நிமிரச் செய்ததும் குனியச் செய்ததும்

• அபிமன்யு

> அன்று உலகக் கிண்ணத்தை இலங்கை அணி கைப்பற்றியதன் மூலம் உலகத்தை தன்பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது. இன்று இலங்கை அணி வீரர் ஒருவர் பெண்ணொருவரை பலாத்காரம் செய்தார் என்ற செய்தி இலங்கை கிரிக்கெட் சபையை தலைகுனிய வைத்தது.

1996 ஆம் ஆண்டு இலங்கை என்ற சிறு புள்ளியை உலகத்தின் பக்கம் திரும்பிப்பார்க்க வைத்த நிகழ்வொன்று நடந்தது.

ஆம், இலங்கை கிரிக்கெட் அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய ஆண்டு தான் 1996.

அன்றுவரை இலங்கையைப் பற்றித் தெரியாதவர்கள் அனைவருக்கும் இலங்கை என்றொரு நாடு உண்டு என்றும் அந்த நாட்டில் மனோதிடம் மிக்க இளைஞர் பலர் இருக்கின்றார்கள் என்றும் அறிய வைத்தது இலங்கை கிரிக்கெட் அணி.

அர்ஜுன ரணதுங்க தலைமையில் களமிறங்கிய இலங்கை அணிக்கு பல சோதனைகள் காத்திருந்தன என்பதே உண்மையானது.

அன்றைய காலத்தில் தனது அபார பந்து வீச்சினால் பல சாதனைகளைச் செய்து கொண்டிருந்தார் முத்தையா முரளிதரன்.

லெக்ஸ்பின், ஒப்ஸ்பின், சூக்கிளி என அந்த உலகக் கோப்பையில் முத்தையா முரளிதரனின் பந்துவீச்சு மிக அபாரமாக இருந்தது. வீரர்கள் அவரின் பந்தை எதிர்கொள்ள மிகச் சிரமப்பட்டனர்.

அவுஸ்திரேலியாவுடனான அன்றைய இறுதிப் போட்டி முத்தையா முரளிதனை பந்து வீச அழைக்கிறார் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க.

முரளிதரன் முதலாவது பந்தை வீசுகிறார். நடுவர் முறையற்ற பந்து என சைகை காட்டுகிறார்.

இதைப் புரிந்திராத முரளிதரன் மீண்டும் பந்து வீசுகிறார். மீண்டும் நடுவர் முறையற்ற பந்து என சைகை காட்டுகிறார். சுதாகரித்துக் கொண்ட அணித்தலைவர் முரளியுடன் ஏதோ பேசுகிறார்.

மீண்டும் முரளி பந்து வீசுகிறார். அப்போதும் நடுவர் முறையற்ற பந்து என சைகை காட்டுகிறார். அணித்தலைவர் நடுவரிடம் பேசுகிறார். அப்போது நடுவர் முரளிதரன் பந்தை எறிகிறார் என அபாண்டமான பழியைப் போடுகிறார்.

இல்லை, அவ்வாறு முரளியின் பந்து இல்லை என நடுவரிடம் வாக்குவாதம் செய்கிறார் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க.

மீண்டும் முரளியை பந்துவீச பணிக்கிறார் அர்ஜுன. அப்போதும் நடுவர் முறையற்ற பந்தென சைகை காட்டுகிறார்.

பொங்கி எழுந்த அர்ஜுன ரணதுங்க நடுவரின் தன்னிச்சை முடிவுக்கு ஆட்சேபனை தெரிவித்து இலங்கை அணி வீரர்களை அழைத்துக் கொண்டு மைதானத்திலிருந்து வெளிநடப்புச் செய்கிறார்.

நிலைமையின் தாக்கத்தை உணர்ந்த போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் இலங்கை அணியினரை சமரசம் செய்து குறித்த போட்டியில் விளையாட பணிக்கிறார்கள்.

இப்போட்டியில் அபாரமாக ஆடிய இலங்கை அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி வரலாறு படைத்தது.

1996



2022



குறித்த தொடரில் அரவிந்த டி சில்வா, ரொஷான் மஹாநாம, சனத் ஜெயசூரிய, சமிந்த வாஸ், மாவன் அத்தபத்து போன்ற தலைசிறந்த வீரர்கள் விளையாடினார் என்பதும் இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

கனவான்களின் விளையாட்டு என வர்ணிக்கப்படும் கிரிக்கெட்டில் முரளிதரன் பந்தை எறிவதாக பகிரங்கமாகக் கூறி மைதானத்தில் முகம் சுழிக்கும் வகையில் நடந்த நடுவரின் செயற்பாட்டிற்கு செருப்படியாய் முரளிதரனின் பந்துவீச்சு பரிசோதனை முடிவு அமைந்திருந்தமை காலத்தின் பதிவு.

கனவான்களின் விளையாட்டு என வர்ணிக்கப்படும் கிரிக்கெட்டில் அத்துமீறல்களும் அசிங்கமான நடவடிக்கைகளும் நடக்கத்தான் செய்கின்றன. அவ்வாறான சம்பவம் கனவான்கள் நிறைந்த இலங்கை அணியில் நடந்தால்? அதுவும் உலகக் கிண்ண தொடர் நடந்து கொண்டிருக்கும் போது அந்தத் தொடரில் விளையாடும் ஒரு வீரர் நடந்து கொண்டால் நிலை எவ்வாறு இருக்கும்.

இருபது-20 உலகக்கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியாவுக்கு ஆடச் சென்ற இலங்கை அணியின் நட்சத்திர இளம் வீரர் தனுஷ்க குணதிலக பாலியல் குற்றத்தில் சிக்கியிருக்கிறார்.

பெண்ணொருவருடன் இணையத்தில் அறிமுகமாகி அவருடன் தொடர்புகளைப் பேணி அவரைச் சந்திக்க அவரின் வீட்டிற்குச் சென்று அங்கு வைத்து குறித்த பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாக குறித்த பெண் வழங்கிய புகாரில் தனுஷ்க குணதிலகவை அவுஸ்திரேலியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனுஷ்க குணதிலகவை இலங்கை கிரிக்கெட் சபை சகல விதமான போட்டிகளிலிருந்து நீங்கியுள்ளதாக அறிவித்திருப்பதுடன் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

இந்த விடயம் சர்வ சாதாரண விடயம் அன்று. இது இலங்கை அணியின் ஏனைய வீரர்களுக்கு பாரிய மன உளைச்சலைத் தரவல்லதாக அமைந்திருக்கும்.

உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி பிரகாசிக்காததற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்திருக்கும்.

அன்று பல சோதனைகளுக்கு மத்தி யில் விளையாடி உலகக் கிண்ணத்தை கைப்பற்றி இலங்கை என்ற புள்ளியை உலக நாட்டவர்களைத் தேட வைத்தது இலங்கை அணி.

இன்று ஒரு பெண்ணை பலாத்காரம் செய்ததால் இலங்கை அணி வீரர் கைது செய்யப்படுகிறார். இது இலங்கை வரலாற்றில் கறைபடிந்த நாளாக பதியப்பட்டிருக்கிறது.

கனவான்களின் விளையாட்டில் கறைபடிந்து விட்டது. அதிலும் மகேல, சங்கக்கார போன்ற மிக மதிப்புமிக்க வீரர்கள் பங்கு கொண்ட அணியில் இவ்வாறானதொரு தவறு நடந்ததை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

"நாடு இருக்கும் நிலையில் உனக்கு பொம்புளைச் சோக்கு கேக்குதோ" என்ற மீம்ஸ் சமூக வலைத்தளங்களில் தீயாய் பரப்பப்பட்டு வருகிறது.

எது எவ்வாறோ எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிகழ்வு நடக்காமலிருக்க இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தனுஷ்க குணதிலக மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்போது தான் கிரிக்கெட் கனவான்களின் விளையாட்டு என்பதை நிரூபிக்க முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் சாத்திரியார் சதாசிவத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஊடகவியலாளர் நெடுந்தீவு லக்ஷ்மன் அவர்கள் காலமாகி விட்டார். சுதந்திர ஊடகவியலாளராக இருந்து பல் வகைக் கட்டுரைகளை எழுதிய நெடுந்தீவு லக்ஸ்மனின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:** அதுசரி இன்னமும் சாத்திரியாரைக் காணவில்லை. என்ன சங்கதி. கங்காணியார் வினவினார்.

**மூப்பர்:** நான் சொல்ல நினைக்க கங்காணியாரும் கேட்கிறார். சாத்திரியார் சதாசிவத்தார் நேற்று பாத் றூமில விழுந்திட்டார். அவரை இப்ப யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில வைச்சிருக்கினம்.

**விதானையார்:** அட! சங்கதி அப்படியோ. அப்ப சாத்திரியாரை ஆரு பார்க்கினம். ஒரு மகனைத் தவிர மற்றப் பிள்ளைகள் எல்லாரும் வெளிநாடு.

**மூப்பர்:** சாத்திரியார் பாடு கஷ்டம் தான். நோயாளர் நலம்புரிச் சங்கத்தில ஒரு ஆளைப் பிடிச்சுப் பார்க்க விட்டிருக்கினம். மகனுக்கும் நேரமில்லையாம்.

**சிறாப்பர்:** அட, நாசமறுப்பு. நோயாளர் நலன்புரிச் சங்கத்தில ஆள் பிடிச்சால் ஒரே தடவையில மூன்று நான்கு பேரை ஒருவர் பராமரிப்பாரல்லோ.

**மூப்பர்:** என்ன செய்யிறது. இப்ப தாய், தந்தையைப் பார்க்கிறதுக்கு ஆளில்லை. பிள்ளைகளுக்கு நேரமில்லை. நேரமிருந்தாலும் கொஸ்பிற்றலில நிண்டு பார்க்கிறதுக்கு விருப்பமில்லை.

இந்த இலட்சணத்தில காசுக்கு ஆள் வைச்சுப் பார்க்கிறது தான் ஒரேவழி எண்டாயிற்று.

**பண்டிதர்:** ஏதோ சாத்திரியார் குணமடைந்து விரைவில வீடு திரும்ப வேணும் எண்டு கடவுளைப் பிரார்த்திப்பம்.



## ATM மூலம் கொள்வனவு மோசடி நடக்கும் கவனம்

**வாத்தியார்:** அதுசரி போதைவஸ்தை கட்டுப்படுத்த படையினர் களமிறங்கி இருக்கினம். அப்ப இன்னும் ஒருசில வாரங்களில வடக்கில போதைவஸ்து வியாபாரம் முற்றாகத் தடுக்கப்பட்டுவிடும் தானே!

**விதானையார்:** போதைவஸ்து பாவனையைத் தடுக்கிற சாட்டில, மாவீரர் தின நிகழ்வுகளைக் கண்காணிக்கிற நோக்கத்திலும் தான் படையினர் களமிறங்கியிருக்கினம்.

**மூப்பர்:** அட, கதை அப்படியோ. விடுதலைப் புலிகளை உச்சரிக்காமல் போரில உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்குத் தடையில்லை என்று நீதி அமைச்சர் கூறியிருக்கிறாரல்லோ.

**சிறாப்பர்:** அதைவிட இன்னொரு முக்கிய விடயம் பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பிரஸ்தாபித்திருக்கிறார்.

**கங்காணி:** என்ன சிறாப்பர் சொல்லுறியள்.

**சிறாப்பர்:** எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னதாக தமிழ் மக்களின்ர பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எண்டு ஜனாதிபதி ரணில் கூறியிருக்கிறார்.

**விதானையார்:** என்ன தான் இருந்தாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இலங்கையால மீள முடியாது.

உலக நாடுகளும் இலங்கையை இறுக்கிக் கொண்டு தான் இருக்கினம்.

ஆகையால ஏதோவொரு வகையில இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுதான் ஆக வேணும்.

**மூப்பர்:** அதுக்கு எங்கட தமிழ் அரசியல் தலைமை ஒன்றுபட வேணுமே.

**பண்டிதர்:** எங்கட தமிழ் அரசியல் தலைமையோட பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எங்கட தமிழ் அரசியல் தரப்புகள் ஒருபோதும் ஒற்றுமைப்படப் போற காரியமில்லை.

பொதுவில தமிழ் அரசியல்வாதிகளின்ர சுயநலத்தை தமிழ் மக்கள் நன்கு புரிந்திருக்கினம்.

ஆக, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தான் இப்ப தமிழ் மக்களின் சமகால நிலைமை குறித்து பாராளுமன்றத்திலும் வெளியிலும் பேசிவருகிறார்.

அதைவிட, விவசாயிகளைச் சந்தித்து அவர்களின்ர தேவைகளை அறிந்து அதற்காகவும் குரல் கொடுத்து வருகிறார்.

ஏனையவர்களுக்கு எப்படி தங்கட அரசியலைக் கொண்டு நகர்த்திறதென்பதே தெரியாமல் இருக்குது.

**விதானையார்:** உண்மைதர்ன். எங்கட விவசாயிகளுக்கு உடனடியாக மண்ணெண்ணெய் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறின சிறீதரன் எம்.பி பாராளுமன்றத்தில வைத்து; வடபகுதியில நிலவுகிற போதைவஸ்து வியாபாரத்திற்கு யார் காரணம் என்பதையும் துணிச்சலோட கூறியிருக்கிறார்.

விதானையார் இவ்வாறு கூறியதும் ஆலடியில சிறிது நேரம் அமைதி நிலவியது.

இவ்வாறு ஆலடியில அமைதி நிலவ மூப்பர் தனது ஏ.ரி.எம் காட்டை எடுத்துப் பார்த்தபடி இருந்தார்.

இதனை அவதானித்த வாத்தியார் வைத்திலிங்கம் என்ன மூப்பர் ஏ.ரி.எம் காட்டைப் பார்த்தபடி இருக்கிறியள். என்ன சங்கதி.

**மூப்பர்:** அதையேன் கேட்கிறியள். ஏ.ரி.எம் காட் மூலம் சில கொள்வனவுகளைச் செய்தன். ஒரு சந்தர்ப்பத்தில ஒரே தொகை இரண்டு தடவைகள் வெட்டப்பட்டிருக்குது.

இன்னொரு சந்தர்ப்பத்தில எடுக்க வேண்டிய தொகைக்கு மேலதிகமாகப் பணம் அறவிடப்பட்டிருக்குது.

நல்ல காலம் என்ர போனுக்கு மெசேச் வாறதால மேலதிகமாக வெட்டப்பட்ட தொகையை மீளப் பெறக் கூடியதாக இருந்தது.

**வாத்தியார்:** மூப்பர் சொல்லுறது உண்மை தான். வேறு சிலரும் இதுபற்றிக் கதைச்சிருக்கினம்.

பொதுவில ஏ.ரி.எம் காட் மூலம் கொள்வனவு செய்கிறவர்கள் தங்கட வங்கிக்கணக்கில இருந்து எவ்வளவு தொகை பெறப்பட்டுள்ளதென்பதை ஆராய்ந்து பார்க்கிறதில்லை.

அதிலும் சிலருக்கு போனில குறுந்தகவலும் வாறதில்லை. இந்த இடத்திலதான் ஏ.ரி.எம் மூலமான கொள்வனவின் போது பண மோசடி நடப்பதற்கு வழி ஏற்படுகுது.

ஆகையால இனி மேலாவது ஏ.ரி.எம் மூலம் பொருட் கொள்வனவு செய்யிறவர்கள் மிகவும் நிதானமாக இருக்க வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாசமலர் போன்ற அன்பை சிவாஜி கணேசன் போல வேறு யாராலும் எடுத்துக் காட்ட முடியுமா வியாசரே?

**ரதுர்ஷன் நவாலி**

**அட சீ என்னடா இந்த வாழ்க்கை என்று வெறுத்த கணங்கள் வியாசருக்கு உண்டோ?**

நிறைய நடந்திருக்கிறது.பாடசாலையில் அகதி என்ற நிராகரிப்பு, வகுப்பறையில் வேண்டப்பாதவர் என்ற நிராகரிப்பு, விளையாட்டில் திறமை அதிகம் உண்டு என்ற பொறாமையின் நிராகரிப்பு, வேலைத்தளத்தில் இவனுக்கு என்ன தெரியும் என்ற நிராகரிப்பு, வாழ்க்கையில் வெற்றிக்காக முயற்சிக்கும் போதெல்லாம் தோல்விகள் தரும் நிராகரிப்பு.
இவ்வாறு பல நிராகரிப்புக்களைக் கண்டு நொந்து நூலாகி அந்த நூலில் இருந்து நாதனமாய் நகர்ந்து வாழ்வை வெற்றி கண்டவன்நான்.வாழ்க்கை வெறுக்கும்ஒவ்வொரு கணங்களும் எம்மை சீர்படுத்த வேண்டிய நேரம் என்பதை புரிந்து கொண்டால் எல்லாம் சுபமே.

**அந்துலா சாவகச்சேரி**

**ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதித்தவர்களுக்கு இந்திய அரசு வழங்கிய விடுதலை ஆறுதலளிக்கிறதே வியாசரே?**

இந்திய அரசினால் வழங்கப்பட்ட இந்த விடுதலை காலம்தாழ்த்தப்பட்ட விடுதலையே.
ஒருவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டால் அவர் சிறையில் இருக்கும் காலத்திலும் மிக அதிக காலம் அவர்கள் சிறைத்தண்டனை அனுபவித்துவிட்டனர்.
ஆனாலும் அவர்களின் விடுதலையை நாம் மனதார வரவேற்கின்றோம். இந்த விடுதலை உலகமே எதிர்பார்த்துக் காத்திருந்தது.
தவறேதும் செய்யாமல் தண்டனை அனுபவிப்பதைப் போன்ற கொடுமை வேறு ஏதும் இல்லை.
அந்தக் கொடுமையை அனுபவித்தவர்களுக்குக் கிடைத்த விடுதலை மிக உன்னதமான விடுதலை.

**மதுவன் மீசாலை**

**பாசமலர் போன்ற அன்பை சிவாஜி கணேசன் போல வேறு யாராலும் எடுத்துக் காட்ட முடியுமா வியாசரே?**

சிவாஜி கணேசன் போல நடிப்பதற்கு வேறு ஒருவர் பிறந்து வரமுடியாது.அவ்வளவுக்கு சிவாஜி கணேசன் நடிப்பின் உச்சம் என்று கூறலாம்.அதனால் தான் அவரை நடிகர் திலகம் என்று கூறுகின்றார்கள்.
ஆயிரம் திரைப்படங்களில் சிவாஜி நடித்திருந்தாலும் அவரின் வீரபாண்டிய கட்டப்பொம்மன் திரைப்படத்தைப் போல வேறு ஒரு படத்தைக் கூறிவிட முடியாது.
அவ்வளவுக்கு வீரத்தின் விளைநிலமாம் வீரபாண்டிய கட்டப் பொம்மனாகவே வாழ்ந்திருந்தார் சிவாஜி கணேசன்.
நடிகர்கள் அனைவரும் சிவாஜி கணேசன் என்கின்ற பல்கலைக்கழகத்தில் கல்வி கற்க வேண்டும்.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**இதழினி புலோலி**

**நாம் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொருவரும் புதுப்புது அத்தியாயமாய் இருக்கிறார்களே வியாசரே?**

கே.கே.எஸ் வீதியால் நான் பயணிக்கும் போது சுன்னாகத்திற்கு அண்மையில் பஸ் தரிப்பிடத்தில் ஒரு முதியவரை நித்தமும் சந்திப்பேன்.
நான் எப்போதாவது ஏதாவது உணவு வாங்கி அவரிடம் கொடுப்பேன்.அது எனது மனதுக்கு சற்று ஆறுதலளிப்பதாய் அமையும்.அத்துடன் நான் ஒரு கொடையாளி என்ற எண்ணமும் அப்பப்போ எட்டிப்பார்க்கும்.
அண்மையில் கடும் மழை. அந்த முதியவரைச் சந்தித்தேன். தான் உண்ணும் பணிசில் பாதியை தெரு நாய்க்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்.
என் உள்ளம் சிலிர்த்துப் போனது. அடடா அடுத்த நேரத்துக்கு உணவில்லாத அந்த முதியவர் தன் உணவில் பாதியை தெரு நாய்க்குக் கொடுக்கிறாரே. இதுவல்லவோ மனிதம். இவ்வாறானவர்களை சந்திப்பதே பாக்கியம் என்று எண்ணியபடி எனது மோட்டார் சைக்கிளை முறுக்கினேன் வலம்புரியை நோக்கி



ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதித்தவர்களுக்கு இந்திய அரசு வழங்கிய விடுதலை ஆறுதலளிக்கிறதே வியாசரே?

**சுதன் குப்பிழான்**

**காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இரண்டு இலட்சம் என்றால்,கொலை செய்தவர்களுக்கு தண்டனை இல்லையா?**

காணாமல் போனவர்கள் யார்? வன்னிப் பெருநிலப் பரப்பில் கொத்துக் கொத்தாய் மடிந்து போனவர்கள் யார்? நலன்புரி முகாம்கள் என்ற பெயரில் முட்கம்பிக்குள் அடைக்கப்பட்டவர்கள் யார்? விசாரணைகள் இல்லாமல் சிறைவாசம் அனுபவிப்பவர்கள் யார்?
பயங்கரவாத் தடைச்சட்டத்தினூடே பணியைச் செய்தவர்கள் யார்?
இவையெல்லாம் தமிழர்கள். ஆதலால் இவை எதற்கும் தீர்வும் இல்லை.
அப்படி தீர்வு கேட்டால் அது இழுத்தடிப்பு செய்யப்படும். இழுத்தடிப்பென்றால் கொஞ்ச நஞ்ச இழுத்தடிப்பல்ல.
உலகத்தை 10-15 தரம் சுற்றி வரும் அளவிற்கு.

**சதீஸ் வரணி**

**சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் வாகனங்களை அரசுடைமை ஆக்கி அதன் மூலம் அரசு வருமானம் ஈட்ட முடியாதா வியாசரே?**

வருமானத்தை ஈட்ட முடியும்.ஆனால் பூனைக்கு மணியை யார் கட்டுவது.
ஒரு தவறு நடந்தால் தவறைச்செய்தவரே முதலில் சட்டத்தின் முன்நிறுத்தப்பட வேண்டியவர். ஆனால் தவறைச் செய்தவர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அதிலிருந்து தப்பித்து விடுகிறாரே.
இதற்கு யாரை நோவது? யார்க்கெடுத்துரைப்பது?
எல்லாம் விதியென்று இருப்பது தான் சாலச் சிறந்தது.
பணத்திற்கும் செல்வாக்கிற்கும் இருக்கும் பவர் நேர்மைக்கும் நல்ல குணத்திற்கும் இல்லையே.

**ராதா யாழ்ப்பாணம்**

**இங்கிலாந்திடம் படுதோல்வியடைந்த இந்திய அணி பற்றிக் கூறமுடியுமா வியாசரே?**

இருபது-20 உலகக்கிண்ணத்தில் மிகச் சிறப்பாக விளையாடிய அணியில் ஒன்று இந்திய அணி.
இத் தொடரில் சரியாக செயற்படாமல் பல காலம் ஏமாற்றிய விராட்கோலி மிகச் சிறப்பாகச் செயற்பட்டார். அத்துடன் சூர்யகுமார், பாண்டியா போன்ற வீரர்கள் அச்சுறுத்தல் மிக்கவர்களாகத் திகழ்ந்தனர்.
ஆனாலும் இங்கிலாந்துடன் சரியாக விளையாடவில்லை.அதிலும் பந்துவீச்சு எடுபடவில்லை என்பதுதான் உண்மை.
இந்தியாவைப் பொறுத்தவரை துடுப்பாட்டம் நிலையாக இருந்தாலும் பந்து வீச்சில் அவ்வளவு பலம் பொருந்தியதாக ஒருநாளும் இருந்த தில்லை. இதை சரி செய்தால் இந்திய அணி இன்னும் சிறப்பு மிக்கதாக மிளிரும்.
இவற்றைவிட இருபது- 20 ஆட்டங்கள் மூலம் ஒரு அணியை நிர்ணயித்துவிட முடியாது. இருபது-20 ஆட்டங்கள் சுவாரஸ்யங்களுக்காக விளையாடலாம். வீரரின் திறமைகளைக் காட்ட இது பொருந்தாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: நாடோடிபாட்டுக்காரன்
இயற்றியவர்: கண்ணதாசன்
இசை: இளையராஜா
பாடியவர்: இளையராஜா



ஆகாய தாமரை அருகில் வந்ததே
நாடோடி பாடலில் உருகி நின்றதே
ஆகாய தாமரை அருகில் வந்ததே
நாடோடி பாடலில் உருகி நின்றதே

காவல்தனை தாண்டியே
காதல் துணை வேண்டியே
ஆகாய தாமரை அருகில் வந்ததே
நாடோடி பாடலில் உருகி நின்றதே

காவல்தனை தாண்டியே
காதல் துணை வேண்டியே
ஆகாய தாமரை அருகில் வந்ததே
நாடோடி பாடலில் உருகி நின்றதே

மெல்லிசை பாட்டு முழங்கிட கேட்டு
இதயமே இளகுதா இள மயிலே
நீ மந்திரன் போலே மணி தமிழாலே
இசைக்கிறாய் இழுக்கிறாய் இளவரசே

ஒரு மட மாது இணை பிரியாது
இருக்குமோ மறக்குமோ
ஒரு பொழுதென்னும் அருவியை மீனும்
பிரியுமோ விலகுமோ
என்று இந்த லீலை எல்லாம்
எல்லை தாண்டி போவது

கைகள் ஏந்தும் வேளையெல்லாம்
கன்னி போகும் பூவிது
முத்தம் தலைவன் இதழ் பதித்திட
இதயம் தித்தித்திட புதிய மது ரசம் வாழ்ந்திட
ஆகாய தாமரை அருகில் வந்ததே
நாடோடி பாடலில் உருகி நின்றதே

புன்னகை முல்லை புது விழி குவளை
அழகிய அதரங்கள் அரவிந்த பூவோ
உந்தன் கன்னங்கள் ரோஜா கொடி இடை அள்ளி
நிறத்தினில் நீ ஒரு செவ்வந்திப்பூ
செண்பகம் ஒன்று பெண் முகம் கொண்டு
எனக்கென பிறந்ததோ

குன்றினில் தோன்றும் குறிஞ்சியும் இங்கே
குமரியாய் விளைந்ததோ
மின்னும் வண்ண பூக்கள் எல்லாம்
மாலையாக ஆகலாம்

மன்னன் தந்த மாலை எந்தன்
நெஞ்சை தொட்டு ஆடலாம்
நெஞ்சை தழுவியது துலங்கிட உறவு விளங்கிட
இனிய கவிதைகள் புனைந்திட

ஆகாய தாமரை அருகில் வந்ததே
நாடோடி பாடலில் உருகி நின்றதே
காவல்தனை தாண்டியே
காதல் துணை வேண்டியே
ஆகாய தாமரை அருகில் வந்ததே...

# நியூட்டனின் ஈர்ப்பு விதியும் இந்துசமய விரத முறைமையும்

**பூமிக்குக் கிட்ட இருக்கின்ற கோள்களில் புதனும் வெள்ளியும் மிக மிக முக்கியம் பெறுகின்றன. அவற்றிற்கிடையிலான ஈர்ப்பு விசை பூமியில் வாழும் ஜீவராசிகள் ஒவ்வொன்றிலும் அதிர்வினை ஏற்படுத்துகிறது.**

இரண்டு பொருட்களுக் கிடையிலான ஈர்ப்பு விசையானது.

(i) அவ்விரண்டு திணிவுகளின் பெருக்கத்திற்கு நேர்விகித சமமாகவும்

(ii) அத்திணிவுகளுக் கிடைப்பட்ட தூரத்தின் வர்க்கத்திற்கு நேர்மாறு விகித சமமாகவும் இருக்கும்.

இவற்றினை, ஒரு சமன்பாடாக்கும்போது ஒரு மாறிலியி இனால் பெருக்கம் செய்ய வேண்டும்.

இந்த மாறிலியை "அகில ஈர்ப்பு மாறிலி" என்கிறோம்.

சரி விடயத்திற்கு வருகிறேன்.

இங்கே இரண்டு பொருட்கள் என்பது,

(i) பூமியும் புதனும்

(ii) பூமியும் வெள்ளியும்

என நோக்கப்படுகிறது. .

பூமிக்கும் புதனுக்கும் இடையிலான ஈர்ப்பு விசையும் பூமிக்கும் வெள்ளிக்கும் இடையிலான ஈர்ப்பு விசையும் தனித்தனியே விளக்கப்படுகிறது. பூமிக்குக் கிட்ட இருக்கின்ற கோள்களில் புதனும் வெள்ளியும் மிக மிக முக்கியம் பெறுகின்றன. அவற்றிற்கிடையிலான ஈர்ப்பு விசை பூமியில் வாழும் ஜீவராசிகள் ஒவ்வொன்றிலும் அதிர்வினை ஏற்படுத்துகிறது.

**புதன்:**

இக்கோளிற்கும் பூமிக்குமிடையிலான ஈர்ப்பு விசை பூமியிலுள்ள ஜீவராசிகளை, அவற்றின் மனநிலைகளில் ஒரு சமநிலைத் தன்மையினைப் பேண முக்கிய பங்காற்றுகிறது.

இக்காலங்களில் ஜீவராசிகளிடையே பதற்ற நிலை (Tension) ஏற்படுவது மிக மிகக் குறைவாக இருக்கும். புதன்கிழமையில் அலுவலக உத்தியோகத்தர்களுக்கிடையே Staff meeting நடைபெற வேண்டும் என அன்றையவர்கள் உருவாக்கியதன் நோக்கமும் இதுவாகத்தான் இருக்க முடியும்.

ஏனென்றால், அதிகாரிகளின் மனநிலை எப்பொழுதும் ஒரேநிலையாக இருப்பதில்லை. ஒருவரின் பதற்ற நிலை, இயல்பான ஈர்ப்பு விசையுடன் கலந்து மற்றவர்கள் மீது தாக்கம் செலுத்துவதும் உண்டு.

அதனால், அதிகாரிகள் உத்தியோகத்தர்களிடம் சாந்தமுடன் உரையாட புதன்கிழமை ஓரளவு சாந்த முறுத்துகின்றன. வீட்டிலே நல்ல காரியங்களுக்கு புதன்கிழமையினைத் தெரிவு செய்வதை நினைத்துப்பாருங்கள்.

இதனால்தானோ, என்னமோ "பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது" என்று அந்தக் காலத்தவர்கள் சொல்லியிருக்கின்றனர்.

ஔவையார்கூட, "சனி, புதன் நீராடு" என்று பாடியது இதனால் தான் போலும்.

**வெள்ளி**

இக்கோளிற்கும் பூமிக்குமிடையில்ான ஈர்ப்பு விசை மிக மிக அதிகமாகும்.

பெரும்பாலும் வாகன



விபத்துகள், பாம்பு கடித்தல், வெள்ளப் பெருக்குகள், மனிதர்களுக்கிடையே சண்டைகள் இக்காலங்களிலே அதிகமாக ஏற்படுவதையும் அவதானிக்கலாம்.

இதனால்தான், இந்து சமயத்திலே, கடவுள் வழிபாட்டில் வெள்ளிக்கிழமை விரமிருத்தலைக் கொண்டு வந்தனர் என்பதையும் நினைக்கத் தூண்டுகிறது. இது ஒரு வகையான தியான முறை ஆகும்.

விரத நாட்களிலே கண்டதையும் சாப்பிடக்கூடாது எனும் மனக்கட்டுப்பாட்டினை வளர்க்கின்றனர். அதுவே, ஒருவரிடம் பொறுமையினை வளர்த்துக் கொள்ள உதவுகிறது.

அதிகரிக்கும் பதற்ற நிலையினை கட்டுப்படுத்தும் பயிற்சிக்காக இந்து சமயத்தில் விரதமுறை கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நினைக்கத் தூண்டுகிறது.

(வேறு காரணங்கள் இருந்தாலும் இதுவும் ஒரு முக்கிய காரணம் ஆகும்.)

இன்று விரத முறைமை ஒரு கண்துடைப்பாகப் பார்க்கப்படுகிறது.

இன்று விஞ்ஞானமாகிவிட்ட இந்துசமய பாரம்பரியங்கள் பலவும் மறக்கப்பட்டு, அதிநவீனம் எனும் போர்வைக்குள் தள்ளப்பட்டுச் செல்வது நல்லதல்லவே.

எதிர்காலத்தில் இந்தப் பூமியில் எவரும் எந்தவொரு உயிரினமும் எந்தவொரு தாவரமும் வாழ முடியாத வெறும் கோளப் பொருளாகப் பூமி மாறிவிடுமோ என்று தான் அச்சப்பட வைக்கிறது.

**சி.உதயகுமார்,**
**அக்கராயன் மகா வித்தியாலயம், கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜிவ் படுகொலை முதல்... ஆறு பேர் விடுதலை வரை..

கடந்த 1991 இல் தமிழகம் உள்ளிட்ட 4 மாநிலங்களில் சட்டப்பேரவை பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தமிழகத்தில், காங்கிரஸுடன் இணைந்து பயணிக்க அ.தி.மு.க முடிவெடுத்த தருணம். 1991 மே 21 ஆம் திகதி மாலை தேர்தல் பிரசாரத்துக்காக விசாகப்பட்டினத்தில் இருந்து சென்னை வந்தார் ராஜிவ் காந்தி.

இரவு 8.30 மணி. சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து வாழப்பாடி ராமமூர்த்தி, மரகதம் சந்திரசேகர் மற்றும் அதிகாரிகளுடன் புறப்பட்ட ராஜிவ், வழியில் போரூர், பூந்தமல்லியில் நடந்த பொதுக்கூட்டங்களில் பேசினார். இரவு 10 மணி. ஸ்ரீபெரும்புதூர் சென்றார். அங்கு தாய் இந்திரா காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு பொதுக்கூட்ட மேடை நோக்கிச் சென்றார்.

இரவு 10.20 மணி. மேடை அருகில் ராஜிவ் வந்தபோது, மகிளா காங்கிரஸின் லதா கண்ணன் மற்றும் அவரது மகள் கோகிலா ஆகியோர் அவரைச் சந்தித்தனர். அப்போது, கோகிலா வாசித்த கவிதையை கேட்டார். தொடர்ந்து, அருகில் மாலையுடன் நின்றிருந்த பெண் ஒருவர், ராஜிவ் கழுத்தில் மாலையை அணிவித்து விட்டு, கீழே குனிந்து காலை தொட்டார். அப்போது பயங்கர வெடிச்சத்தம்.

இரவு 10.25 மணி: ராஜிவ் காந்தி, லதா கண்ணன், கோகிலா, மாலை அணிவித்த பெண்ணான தனு, மாவட்ட எஸ்.பி. முகமது இக்பால், ராஜிவ் காந்தியின் பாதுகாப்பு அதிகாரி உள்ளிட்ட காவலர்கள் என 17 பேரின் உடல்கள் இரத்த வெள்ளத்தின் நடுவே கிடந்தன. ராஜிவ் உடல் அவர் அணிந்த ஷூ மூலம் கண்டறியப் பட்டு, மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. மறுநாள் உடல் டெல்லிக்கு அனுப்பப்பட்டது.

மே 22. ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மாநில அரசின் சி.பி.சி.ஐ.டியில் குழு அமைத்து விசாரணை தொடங்கியது.

மே 24. சி.பி.ஐக்கு வழக்கு மாற்றப்பட்டது. டி.ஆர்.கார்த்திகேயன் தலைமையிலான சிறப்பு புலனாய்வு பிரிவு விசாரணையை தொடங்கியது. அன்றே, சி.பி.ஐ வழக்கு பதிவு செய்தது.

மே 29. கொலையாளி என சந்தேகப்பட்ட பெண் உள்ளிட்டோரின் புகைப்படங்கள் வெளியிடப்பட்டன.

சி.பி.ஐ தொடர் விசாரணை காரணமாக, சென்னையில் தங்கியிருந்த நளினியின் தாயார் பத்மா, சகோதரர் பாக்கியநாதன் ஆகியோர் இந்த வழக்கில் முதன்முதலில் ஜூன் 11 இல் கைது செய்யப்பட்டனர். ஜூன் 14 இல் நளினி, முருகன் இருவரும் சென்னை சைதாப்பேட்டை பேருந்து நிறுத்தத்திலும், அடுத்தடுத்து ராபர்ட் பயஸ், பேரறிவாளன், ஜெயக்குமார் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

ஜூலை 27. விடுதலைப்புலிகள் அமைப்பை சேர்ந்த விக்கி, ரகு ஆகியோர் கோவையில் கைதாகினர். மறுநாள் அதே அமைப்பைச் சேர்ந்த டிக்சன், குணா ஆகியோர் சயனைடு தின்று உயிரிழந் தனர்.

ஓகஸ்ட் 17. கர்நாடகாவின் முதாடி, பிரூடா பகுதி களில் காவல்துறை சுற்றிவளைத்ததை அறிந்த புலி கள் இயக்கத்தைச் சேர்ந்த 17 பேர் சயனைடு அருந்த, அதில் 12 பேர் உயிரிழந்தனர். 5 பேர் பிடிபட்டனர்.

ஓகஸ்ட் 19. அவர்கள் கொடுத்த தகவலின்பேரில், பெங்களூரு புறநகரில் ஒரு வீட்டை சி.பி.ஐ அதிகாரிகள் சுற்றி வளைத்தனர். அங்கு தங்கியிருந்த சிவராசன், சுபா, நேரு, சுரேஷ் மாஸ்டர், அம்மன் உள்ளிட்டோர் விஷம் அருந்தினர்.

1992 மே 20. சென்னை தடா நீதிமன்றத்தில் 55 பக்க குற்றப் பத்திரிகையை சி.பி.ஐ தாக்கல் செய்தது. அதில் பிரபாகரன், பொட்டு அம்மன், அகிலா ஆகியோர் தலை மறைவு குற்றவாளிகளாக அறிவிக்கப் பட்டனர். சிறையில் இருந்த 26 பேர், உயிரி ழந்த 12 பேர் உட்பட 41 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

1998 ஜனவரி 28. சிறையில் இருந்த 26 பேருக்கும் மரண தண்டனை விதித்து தடா நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர்.

1999 மே 5. தீர்ப்பில் நளினி, சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய 4 பேருக்கு மட்டும் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது. ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோரது மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. தடா சட்டப்படி குற்றம் சாட்டப்பட்ட சண்முக வடிவேலு குற்றமற்றவர் என விடுவிக் கப்பட்டார். மற்றவர்கள் சிறையில் இருந்த காலத்தையே தண்டனைக் காலமாகக் கருதி விடுவிக்கப்பட்டனர்.



1999 ஒக்டோபர்.10. தூக்கு தண்டனை விதிக்கப் பட்ட 4 பேரும் தமிழக ஆளுநர் பாத்திமா பீவிக்கு கருணை மனு அனுப்பினர். ஒக்டோபர். 29 இல் அந்த மனுக்களை ஆளுநர் தள்ளுபடி செய்தார். ஆளுநர் தன்னிச்சையாக முடிவெடுத் ததாக கூறி 4 பேரும் உயர் நீதிமன்றத்தை அணுகினர்.

2000 ஏப்ரல் 19. முதல்வர் கருணாநிதி தலைமையிலான அமைச்சரவை எடுத்த முடிவின்படி, நளினியின் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட மற்ற 3 பேரும் குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்பினர்.

2007 இல் குடியரசுத் தலைவராக பிரதீபா பாட்டீல் இருந்தபோது, கருணை மனு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதன்பிறகு, 2011 இல் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

2011 ஒகஸ்டில் மரண தண்டனையை இரத்து செய்யக் கோரி, பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். 3 பேருக்[illegible] தூக்[illegible] தடை விதிக்கப்பட்டது. வழக்கு உச்ச நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014 பெப்ரவரி 18. கருணை மனுக்கள் நிலுவையை காரணம் காட்டி பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் மரண தண்ட னையை இரத்து செய்வதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பெப்ரவரி. 19. தமிழக அமைச்சரவை தீர்மானத்தின்படி, குற்றம் சாட்டப்பட்ட 7 பேரும் விடுவிக்கப்படுவதாக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இதை எதிர்த்து மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தடை பெற்றது. மறுநாள் வழக்கு அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்பட்டது.

2015 டிசெம்பர் 2. மத்திய அரசு ஒப்புதல் இல்லாமல் 7 பேரையும் விடுவிக்க முடியாது என்று கூறிய இப்ராஹிம் கலிபுல்லா தலைமையிலான 5 நீதிபதிகள் அமர்வு, 161 ஆவது பிரிவின் கீழ் மத்திய அரசு ஒப்புதல் இல்லாமல் விடுவிக்கலாம் என தீர்ப்பளித்தது.

2016 மார்ச் 2. தமிழக அரசு, 7 பேரையும் விடுவிக்க அனுமதிக்குமாறு மத்திய அரசுக்கு கடிதம் எழுதியது.

2018 செப்டெம்பர் 6. ஆளுநர் 161 ஆவது பிரிவின் கீழ் 7 பேர் விடுதலையில் முடிவு எடுக்கலாம் என ரஞ்சன் கோகாய் தலைமையிலான உச்ச நீதிமன்ற அமர்வு தீர்ப்பளித்தது.

2018 செப்டெம்பர் 9. சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 7 பேரையும் விடுவிக்க தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது.

2021 மே 20. தமிழக முதல்வராக பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின், அமைச்சரவை தீர்மானத்தின்படி 7 பேரையும் விடுதலை செய்ய ஆணையிடுமாறு குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதினார்.

2022 மே 18. மாநில அரசின் பரிந்துரை மீது ஆளுநர் காலம் தாழ்த்தியதாக கூறி, ஆயுள் தண்டனையில் இருந்த பேரறிவாளனை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்தது.

2022 நவம்பர் 11. பேரறிவாளன் விடுதலை அடிப்படையில் விடுதலை கோரிய நளினி, ரவிச்சந்திரன் மனுவை விசாரித்த உச்ச நீதி மன்றம் அவர்கள் இருவரை மட்டுமின்றி, சிறையில் இருக்கும் ராபர்ட் பயஸ், முருகன், சாந்தன், ஜெயக்குமார் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டது. இதன்மூலம் அவர்களது 30 ஆண்டுகளுக்கு மேலான சிறை வாசம் முடிவுக்கு வந்துள்ளது.

– த இந்து –

## இயற்கையைக் காப்போம்

இயற்கையைக் காப்போம்
செயற்கையைக் குறைப்போம்
மரத்தை நாட்டுவோம்
மண் வளத்தை பெருக்குவோம்
இயற்கையை அழித்து
தன் இனத்தை கருவறுக்கும் மனிதன்


வானத்தில் இருந்து வரும்
மழைத்துளிகள் மண்ணைத் தொடு முன்
விவசாயிகளின் மனதை
நனைத்து விடுகிறது
குடும்பத்தில் மகிழ்ச்சியை
விதைத்து விடுகிறது

சுயநலம் பாராமல்
பிறரை மகிழ்விப்பது
இயற்கை மட்டும் தான்
செயற்கை வேருன்ற
இயற்கை அழிப்பது
மனிதன் தனக்குத் தானே
வெட்டும் புதைகுழி

கோபங்கள் சீற்றங்கள்
மனிதனுக்கு மட்டுமல்ல
இயற்கைக்கும் உண்டு
மனிதனைப் போல் பழி வாங்குவதில்லை
செயற்கையின் அதிகரிப்பால்
சீற்றம் கொண்டு எழுகின்றது
நாம் இயற்கையை அடக்க நினைக்கும் போது
அது எம்மை அழித்து விடுகிறது

அராலியூர் ப.தர்மகுமாரன்

## தற்கொலை ஓர் தீர்வாகுமா



இறைவன் தந்த உயிரை மனிதன் பறிப்பதா
உயிரை மாய்ப்பதால் தீர்வு கிடைக்குமா
உயிரை மாய்ப்பது பாவச் செயல் அல்லவா
மனித வாழ்வு மகத்தான வாழ்வல்லவா

பிரச்சினைகள் வாழ்வில் வருவதல்லவா
தீர்வு காண பல வழிகள் உண்டல்லவா
வாழ்வைத் தொலைத்தால் திரும்ப கிடைக்குமா
தற்கொலையானது ஓர் தீர்வாக முடியுமா

எந்தப் பிரச்சினையும் எளிதில் தீர்க்க முடியுமே
முடியாதது ஒன்றும் முடிவாக முடியுமா
கலக்கம் ஏனடா கண் திறந்து பார்த்திடு
உலகம் உனக்கானதே என்பதை மறவாதே

எஸ்.பி.தனா,
தெல்லிப்பழை.

## காலம் கனிவு தரும்

அறிவோடு பலம்சேரின்
பலம் யாவும் ஒன்றாகி
நிலம் வாழும் நிலையாகுமே
கலையோடு எழில் சேரும்
நிலையாகிப் பொருளாகும்
விலை பெற்று நிலை உயரும்

ஆசைக்குத் துணை போகும்
அறிவுக்கு வளம் சேர்க்கும்
அன்புக்குப் பலம் வேண்டுமா?
என்றென்றும் வாழ்கின்ற வாழ்வுக்கு
வளத்தோடு பலம் சேர்க்கும்
மனத்தோடு குணம் சேருமா?

காலநிலை சீராகில்
ஞாலநிலை பலமாகும்
கோல எழில் குடி இருக்கும்
சீலம் அறிந்த வர்க்கும்
ஞாலம் துணை போகும்
காலம் கனிவு தரும்.

வளவை வளவன்.

## மௌனத்தின் தேடல்- 583



## யாசகத்தின் மறுவடிவம்

அரசாங்க அதிகாரி நான்கு சுவருக்குள்
அதட்டி வாங்கும் யாசகம் லஞ்சம்
பசிக்கும் வயிற்றுக்காய் பாத்திரமேந்தி
பண்புடன் நாலு பேரிடம் யாசகம்
செய்வது பிச்சை
பிச்சை எடுப்பவனை
ஏளனமாய் பார்க்கும் உலகம்

ஆ.செல்வி,
பருத்தித்துறை.

## மௌனத்தின் தேடல்- 584



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## ஆசாமி

இலஞ்சம் வாங்கி
லட்சம் சேர்த்து
வஞ்சகமாய் வலை வீசும்
வஞ்சகனே
வருகிறது 1905
வரும் அவனிடம்
வசமாய் மாட்டிட
வழிமேல் விழி வைத்து
காத்திருக்கிறோம்.

செல்வா சுப்பிரமணியம்,
சாவகச்சேரி.

## நிலை

உறவுகள் கூடி
ஒன்றாய் இருந்து
உணவுகள் உண்டு
சிரித்து மகிழ்ந்த காலத்தை
வெறும் புகைப்படங்களிலேயே
பார்த்து வியக்கிறது
இன்றைய சமூகம்...

நிலக்ஷனா, வதிரி.

## நீ நிலம் போற்ற வாழ்க

கடமை உணர்வுகள் இன்றைய உலகிலே
கானல்நீர் போலானதோ
கையூட்டுப் பெற்றாலே கடிதங்கள் வாசிக்கும்
காலமும் உருவானதே
பிழையான நெறிகளில் புதையல்கள் சேர்க்கின்ற
பேதமை நிலையானதோ
சாபச் சுமைகளைத் தேடியே வாழ்வினை
சிதைத்திடல் அறமாகுமோ
நீர்க்குமிழி போலும் நம் வாழ்வு நிலை பெற
நேர்மையுடன் உறவாடுவாய்
நிலையான இன்பங்கள்
நிறைவாகப் பெற்றுமே
நீ நிலம் போற்ற வாழ்க.

எஸ்.ராஜா,
சில்லையூரான்.

## இலஞ்சம்

பள்ளி சாலைகளில் கல்விக்கு இலஞ்சம்
வைத்தியசாலைகளில் மருத்துவத்திற்கு இலஞ்சம்
அரச அலுவலகங்களில் அரச சேவைக்கு இலஞ்சம்
பொலிஸ் அதிகாரிகளிடம் அநீதிக்கு இலஞ்சம்
மேல் அதிகாரிகளிடம் பதவிக்கு இலஞ்சம்
அரசியல்வாதிகள் ஊழலுக்கு இலஞ்சம்

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

## ப(ல)ஞ்சம்

பஞ்சத்தில் வாடினான்
வேலை இல்லாமல்
லஞ்சத்தால் வாங்கினான்
ஓட்டுநர் உரிமம்
லட்சியக் கனவுகளுடன்
மாண்டன உயிர்கள்

பிரகவி,
கொக்குவில்.

## கையொப்பம் இடுவாரோ!

வாக்குப் போட வாங்குவது இலஞ்சம்
கோவையைப் பார்க்க கொடுப்பது இலஞ்சம்
கையூட்டுக் கொடுத்தே கதிரைக்கு வந்தவர்
கை இலஞ்சம் கறக்காது கையொப்பம் இடுவாரோ!

பிரமன், கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

## குறுக்கே புகுந்த குறுவாள்

காலத்தின் பதிவு 40

அவர்கள் என்ன தீர்மானிக்கிறார்கள் என்பதை நொடிப் பொழுதில் ஊகித்துக் கொண்ட அமீர் தலைவன் தான் அல்ல என்பதை அவர்களுக்கு உணர்த்த மார்பில் கையை வைத்தும் தலையை ஆட்டியும் விடயத்தை விளக்கி, இளைய பல்லவன் தான் தலைவன் என்பதைத் தன் ஆட்காட்டி விரலால் சுட்டிக்காட்டியும் மரியாதைக்கு அறிகுறியாகத் தலையை வணங்கியும் அறிவித்தான்.

அந்த அறிவிப்பு அந்த நால்வரிடை பெரும் வியப்பை விளைவித்ததை அவர்கள் முகபாவத்திலிருந்து புரிந்து கொண்ட அமீர், அந்த விநாடியிலிருந்து அவர்களிடமிருந்து தன் கண்களை அகற்றவேயில்லை. அவர்கள் பார்வையிலிருந்த ஏதோ ஓர் அம்சம் அவனுக்குப் பெரும் சந்தேகத்தை விளைவித்திருந்தது. அப்படி அவர்களைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அமீர், அந்த நால்வரில் முதலில் நின்றவன் கச்சையில் கையை வைத்துக் குறுவாளை எடுத்தவுடனேயே, தன் இடையில் வரிசையாக இருந்த குறுவாள்களில் ஒன்றை எடுத்து மின்னல் வேகத்தில் வீசி விட்டான். அதனால் செயலிழந்த எதிரியின் குறுவாள் நிலத்தில் விழுந்ததும், இருப்பிடத்தை விட்டுப் பயங்கரப் பார்வையுடன் எழுந்த அமீர், மற்றொரு குறுவாள்ளயும் எடுக்கக் கச்சையில் கையை வைத்தான். அந்த விநாடியில் தான் இளைய பல்லவன் கரம் எழுந்து, 'வேண்டாம் என்று' அவனுக்கு சைகை செய்து தடுத்தது.

அடுத்தடுத்து இடையில் செருகப்பட்டிருந்த குறுவாள்களை எறிந்து அந்த நால்வரையும் பட்பட்டென்று மண்ணில் சாய்த்து விட முடிவுசெய்த அமீரைத் தடை செய்த இளைய பல்லவன், மிக நிதானமாக அந்த நால்வரையும் ஏற இறங்க நோக்கினான். நன்றாக்த் தீட்டப்பட்ட ஈட்டியின் முனைகளை விடப் பளிச்சிட்ட அவன் பார்வையைக் கண்ட அந்த நால்வர் மேலும் வியப்பே அடைந்தார்கள். அவர்களுக்கு மட்டுமல்ல வியப்பு இளைய பல்லவன் கூட அவர்களைக் கண்டு உள்ளூர வியப்பே எய்தினான். பதக் சாதியாரும் சூளுக்களும் காட்டுமிராண்டிகளென்றும் மனிதர்களைத் தின்பவர்களென்றும் கேள்விப்பட்டிருந்த இளைய பல்லவன் அநாகரிக உடையணிந்த சில பயங்கர மனிதர்களையே அந்த நடன நிகழ்ச்சியில் எதிர்பார்த்திருந்தான்.

பலவர்மனும் மஞ்சளழகியும் அவர்கள் வருகை குறித்துப் பயந்ததிலிருந்தும் அது சம்பந்தமாகத் தன்னை அச்சுறுத்தியதிலிருந்தும் வருபவர்கள் நாகரிக மனிதர்களாயிருக்க முடியாதென்ற முடிவுக்கே வந்திருந்தான். ஆகவே, முகங்களில் கடுமையும் பயங்கர மீசைகளும் இருந்தாலும், மிகுந்த நாகரிகமான உடைகளணிந்து அரசாங்கத்துப் படைத்தலைவர்களைப் போல வந்திருந்த அந்த நால்வரைக் கண்டதும் ஒரு விநாடி வியப்பின் வசப்பட்டான் இளைய பல்லவன். ஒரு வேளை இவர்கள் பலவர்மன் குறிப்பிட்ட நால்வராயிருக்க முடியாதோ என்ற சந்தேகங்கூட அவன் இதயத்தில் எழுந்தது. ஆனால் அவர்களுக்குப் பின்னால் நின்ற ஐம்பது வீரர்களின் தோற்றத்தையும் முன்னால் அசைவற்று ஆசனத்தில் உட்கார்ந்திருந்த பலவர்மன் முகத்தில் லேசாகத் தெரிந்த பயத்தையும் கண்டதும் அந்த நால்வர் இவர்கள் தான். சந்தேகமில்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவன் எண்ணங்கள் இந்தத் திக்குகளில் சுழன்றது. இரண்டொரு விநாடிகளேயென்றாலும் அந்த இரண்டொரு விநாடிகளில் எதிரேயிருந்த கூட்டத்தின் ஆரம்ப அச்சமும் மௌனமும் கலைந்து விடவே கொள்ளைக்காரரில் சிலர் பெரும் கூச்சலிட்டு எழுந்தார்கள். உணர்ச்சிகள் புரண்டுவிடும் நிலை எய்திவிட்டதை உணர்ந்த பலவர்மன் தனது காவல் வீரர்களுக்கு ஏதோ சைகை செய்யவே அவர்களில் சிலர் இளைய பல்லவனிருந்த இடத்தை அணுக அடியெடுத்து வைத்தனர். அடுத்த விநாடி அந்தக் கடற்கரையை மிக உறுதியுடன் ஊடுருவிய இளைய பல்லவன் சொற்களும் ஆதிகாரத்துடன் நாற்புறமும் அவனது பார்வையும் கொள்ளையரை நோக்கி எழுந்த அவன் கையின் சைகையும் அமைதியைச் சிருஷ்டித்தன. (தொடரும்)

---

# உலகின் இயற்கை அதிசயங்கள் ஏழு-பகுதி 1



தென் அமெரிக்க பூமித் தகடு நகர்ந்த இயற்கை மாற்றத்தால், ஆண்டிஸ் மலைகள் மெதுவாக உயர்ந்தன. ஆண்டிஸ் மலை உயர்ந்ததால் கயானாவில் இருந்த பாறைத் திட்டுகள் அமேசான் ஆற்றின் ஓட்டத்தை தடுத்தன. இந்த காரணத்தினால் அமேசான் ஆற்றின் கரையின் இரு புறமும் நீரோட்டம் அதிகரித்து, அமேசான் மழைக்காடுகள் உருவாகியதாம். எண்ணற்ற செடி கொடிகளையும் மூலிகைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள அதிசய உலகம், அமேசான் மழைக்காடுகள்.

இன்றும், அமேசான் காடுகளிலும் நதிகளிலும் மனிதர்களால் கண்டுபிடிக்கப்படாத மர்மங்கள் நிறையவே உள்ளன. பல வகையான மருத்துவக் குணங்கள் கொண்ட தாவரங்கள் இங்கு வளர்வதால் இங்கு பற்பல மருத்துவ ஆராய்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அமேசான் ஆற்றின் 1100 கிளை நதிகளில், 17 கிளை நதிகள் சுமார் 1500 கிலோ மீற்றர் நீளம் கொண்டவை. 28 பில்லியன் கலன்கள் நீர் ஒவ்வொரு நிமிடத்துக்கும் அட்லாண்டிக் சமுத்திரத்துக்குள் பாய்கிறது. இந்த ஆற்றுத் தண்ணீர், கடலுக்குள் 100க்கும் மேற்பட்ட மைல் வரைக்கும் கலந்து, கடலின் உப்புத் தன்மை செறிவை குறைக்கின்றது.

அமேசான் காடுகளிலும், நூறு சதவிகித பிராண வாயு கிடைக்கிறது என்பதால்தான் உயிரியல் வளம் மிக்க இம் மழைக்காடுகளில், இலட்சக் கணக்கான வகைகளைச் சேர்ந்த பூச்சியினங்களுக்கும் ஆயிரக்கணக்கான தாவர வகைகளுக்கும் ஏறத்தாழ இரண்டாயிரம் பறவைகள், பாலூட்டிகள் ஆகியவற்றிற்கும் இருப்பிடமாக விளங்குகிறது.

அமேசான் காடு பிரேசில், கயானா, ஈக்குவடார், சுரிநாம், கொலம்பியா, பொலிவியா, பிரெஞ்சு கயானா, பெரு, வெனிசுலா ஆகிய ஒன்பது நாடுகளிலும் பரவியுள்ளது. எனினும் அமேசான் காடுகள் பெரும்பாலும் பிரேசில் நாட்டில் தான் அமைந்துள்ளது.

பரப்பளவில் உலகின் 5 ஆவது மிகப்பெரிய நாடான பிரேசிலில் 53 இலட்சம் சதுர கிலோமீற்றர் பகுதி, அடர்ந்த காடுகளாலான பகுதியாகும். இப்பகுதிகளில் 17 இலட்சம் ஏக்கர் பகுதிகள், காடுகளைப் பாதுகாக்கும் பொருட்டு அரசு பாதுகாப்பில் உள்ளன.

சமீபத்தில் கிடைத்த ஆதாரங்களின்படி பிரேசில், பெரு நாடுகளுக்கிடையிலான எல்லைப் பகுதியில் உள்ள மழைக்காடுகளில் வாழும் பழங்குடியினர், தமது உடல்களில் சிவப்பு நிற சாயப்பூச்சு பூசியிருப்பதுடன் கையில் வில்-அம்பு போன்ற கூரான ஆயுதங்களையும் கொண்டுள்ளனர். ஒருவர் ஒருவருடன் தொடர்பு வைத்திராத 14 வித்தியாசமான இனக் காட்டு வாசிகள் இங்கு வாழ்ந்து கொண்டிருப்பதாக நம்பப் படுகின்றது.

அமேசானில் கிடைக்கும் 3000 பழ வகைகளில் 200 வகை மட்டும் பூமியின் நாகரிகமடைந்த மக்களின் பயன்பாட்டுக்கு வருகின்றன. அமேசான் காடுகளில் வாழும் பழங்குடியின மக்கள் சுமார் 2000 அரிய பழ வகைககளை உண்ணும் பேறு பெற்றவர்களாய் உள்ளனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

316

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# சந்தேகங்களுக்கான பதில்கள்


**கேள்வி: 49 வயது நிரம்பிய நான் கொலஸ்ரோல் நோய் காரணமாகப் பல வகையான உணவுக் கட்டுப்பாட்டுடன் மருந்தும் பாவித்து வருகின்றேன். இந்த நோயைக் குணப்படுத்த முடியாதா? எவ்வளவு காலத்துக்கு இந்தக் கடுமையான கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்? சிலர் உணவிலே இறால் சேர்த்துக்கொள்வது பாதுகாப்பானது என்று சொல்லுகிறார்கள் இது உண்மையா?**

பதில்: குருதியிலே கொலஸ்ரோல் அதிகம் உள்ள நிலையை ஒரு நோய் என்று கருத வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு வேறு நோய்கள் வருவதைத் தடுப்பதற்காக உங்களின் கொலஸ்ரோலைக் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டிய தேவை இருக்கிறது.

இதற்கு நீங்கள் ஆரோக்கியமான உணவுவகைகளை அதிகம் உண்ண வேண்டும். நீங்கள் மட்டுமல்ல அனைவருமே ஆரோக்கியமான உணவு வகைகளை உண்டு வந்தால் பல நோய்களிலிருந்து தப்பிக் கொள்ளலாம்.

ஆரோக்கியமான உணவு வகைகளான மீன், கோழி இறைச்சி, இறால், சுறா, பருப்பு, பயறு, உழுந்து, மரக்கறி வகைகள், பழவகைகள், ஆடைநீக்கிய பால், முட்டை வெள்ளைக்கரு, கௌபி, சோயா அவரை, மோர், முட்டுக்காய்த் தேங்காய் போன்றவை ஆகும். இரத்தத்தில் கொலஸ்ரோல் அதிகம் உள்ளவர்களும் வாரத்துக்கு 2 முட்டைகளைப் பாவிப்பது நல்லது.

இவற்றை எல்லாம் அதிகம் உண்பதை கடுமையான உணவுக்கட்டுப்பாடு என்று நீங்கள் கருதத்தேவையில்லை. இறாலினால் அலர்ஜித் தன்மை அற்றவர்கள் உணவிலே இறாலைச் சேர்த்துக் கொள்வது பாதுகாப்பானது. கொலஸ்ரோல் அதிகம் உள்ளவர்களும் போதியளவு இறால் உண்பது பாதுகாப்பானது



என ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே ஆரோக்கியமான உணவு முறைக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வது நல்லது.

இதற்குக் காலவரையறை இல்லை. உணவிலே சீனி, எண்ணெய் அல்லது கொழுப்பு அதிகமுள்ள உணவுகளைத் தவிர்ப்பது அனைவருக்கும் நல்லது. இது கொலஸ்ரோல் அதிகமாக உள்ளவர்களுக்கு மட்டுமான விதிமுறை இல்லை.

**இலைவகை, மரக்கறிவகைகளை இரவு உணவில் சேர்த்துக் கொள்வது பாதுகாப்பானதா? இலைவகைகளை இரவு உணவில் சேர்த்துக் கொள்வதால் தீயவிளைவுகள் ஏற்படும் என்ற ஒரு பரவலான அபிப்பிராயம் நிலவுகிறது. இது சம்பந்தமான உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவீர்களா?**

மூன்று நேர உணவிலும் இலை வகைகள், மரக்கறி வகைகளைச் சேர்த்துக் கொள்வது உடல் நலத்திற்கு மிகவும் நல்லது.

இரவு வேளைகளில் இலைக் கறிவகைகளை உண்பது ஆபத்தானது என்ற அபிப்பிராயம் ஒரு மூடநம்பிக்கை ஆகும்.

இதில் எந்தவித உண்மையும் இல்லை. ஆனால் உணவு உண்டவுடன் உறங்கச் செல்வது ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல.

இரவில் எந்த வகையான உணவை உண்டாலும் 1-2 மணி நேரத்துக்குப் பின்பு படுக்கைக்குச் செல்வது நல்லது.

3 நேர உணவிலும் இலைக் கறி வகைகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் குடல் நோய்கள், இருதய நோய்கள், நீரிழிவு, உடல் நிறை அதிகரிப்பு போன்ற பலபல சுகாதார பிரச்சினைகளில் இருந்து நாம் பாதுகாப்புப் பெற்றுக்கொள்ள முடியும்.

மரக்கறி, இலைவகைகளைத் தெரிவு செய்யும்பொழுது மருந்து தெளிக்கப்படாத மரக்கறி வகைகளைத் தெரிவு செய்து உண்பது நல்லது.


உதாரணமாக அகத்தி, சண்டி, முருங்கையிலை, வல்லாரை, தவசிமுருங்கை, வாழைப் பொத்தி, கறிவேப்பிலை போன்ற மரக்கறி வகைகளுக்குப் பொதுவாக மருந்து விசிறப்படுவதில்லை.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 400 மில்.டொலர் இராணுவ உதவி உக்ரைனுக்கு வழங்கியது அமெரிக்கா



(கீவ்)

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கிய போர் 8 மாதங்களை கடந்து தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்தப் போரில் உக்ரைனின் பல்வேறு நகரங்கள் சின்னாபின்னமாகியுள்ளன. பல நகரங்களை ரஷ்யா தன் வசப்படுத்தியுள்ளது.

ஆனாலும் உக்ரைன் இராணுவம் துணிச்சலுடன் தொடர்ந்து ரஷ்யப் படைகளை எதிர்த்து சண்டையிட்டு வருகின்றன. உக்ரைனுக்கு உதவியாக அமெரிக்கா மற்றும் பல மேற்கத்தேய நாடுகள், இராணுவம் மற்றும் பொருளாதார ரீதியான உதவிகளைச் செய்து வருகின்றன.

அந்த வகையில், போர் தொடங்கியதில் இருந்து இது வரை உக்ரைனுக்கு அமெரிக்கா பல ஆயிரம் கோடி மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்கியுள்ளது.

அதன் தொடர்ச்சியாக தற்போது மேலும் 400 மில்லியன் டொலர் மதிப்புடைய இராணுவ உதவிகளை உக்ரைனுக்கு அமெரிக்கா அனுப்பவுள்ளது.

புதிதாக வழங்கப்படும் இந்த இராணுவ உதவி தொகுப்பில் முதல் முறையாக அதிநவீன வான்பாதுகாப்பு அமைப்பு, ரஷ்யாவுக்கு எதிரான தனது பதில் தாக்குதலில் உக்ரைன் வெற்றிகரமாகப் பயன்படுத்தி வரும் ஹிமார்ஸ் எனப்படும் அதீத சக்தி கொண்ட பீரங்கி ரொக்கெட் அமைப்பு உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்கள் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே உக்ரைனுக்கு வழங்குவதற்காக தென்கொரியாவிடம் இருந்து சுமார் 1 இலட்சம் ஹோவிட்சர் பீரங்கிக் குண்டுகளை அமெரிக்கா வாங்க இருப்பதாகவும் இது தொடர்பாக அமெரிக்கா-தென்கொரிய அரசுகள் சில காலமாக ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அமெரிக்க இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (4)

# பெற்றோல் டாங்கர் வெடித்ததில் 12 பேர் பரிதாப பலி



(அபுஜா)

நைஜீரியாவில் பெற்றோல் டாங்கர் லொறி வெடித்து விபத்துக்குள்ளானதில் 12 பேர் பரிதாபமாக உயிரிழுந்தனர்.

பெற்றோல் ஏற்றிக் கொண்டு சென்ற டாங்கர் லொறி நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது சாலையின் குறுக்கே கார் ஒன்று நின்றுள்ளது.

காரை பார்த்ததும் டாங்கர் லொறியை சாரதி நிறுத்த முயன்று இருக்கிறார்.

ஆனால், லொறியின் பிரேக் செயலிழந்ததால் கட்டுப்பாட்டை இழந்த லொறி காருடன் பயங்கரமாக மோதியுள்ளது.

இதில் டாங்கர் லொறி வெடித்தது. இந்தப் பயங்கர விபத்தில் 12 பேர் உடல் கருகி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (4)

# அவுஸ்திரேலியாவில் தமிழ் குடும்பம் குளத்திலிருந்து சடலமாக மீட்பு

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் கன்பெராவின் வடபகுதியில் உள்ள குளத்திலிருந்து தமிழ் குடும்பமொன்றைச் சேர்ந்த மூவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தை கொலை.தற்கொலை என்ற அடிப்படையில் விசாரணை செய்து வருவதாக அவுஸ்திரேலியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் யெராபி குளத்திலிருந்து தாயினதும் இரண்டு சிறுவர்களினதும் உடல்களை மீட்டிருந்தனர்.

இது குறித்த விசாரணை ஆரம்பகட்டத்தில் உள்ளது.

இதனை கொலை. தற்கொலை என கருதுகின்றோம் .இதில் உயிரிழந்த மூவருக்குமே தொடர்புள்ளதாக கருதுகின்றோம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகள் குழப்பமானவையாக காணப்படுவதாலும் இன்னமும் பூர்த்தியடையாததாலும் உயிரிழப்புகளிற்கான காரணங்கள் குறித்த தெளிவான அறிக்கையை மரண விசாரணை அதிகாரியிடம் சமர்ப்பிக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

# சம்பள உயர்வு கோரி பல்கேரியாவில் போராட்டம்



(சோபியா)

பல்கேரியாவில் பணவீக்கம் அதிகரித்து வருவதால், சம்பள உயர்வு கோரி ஆயிரக்கணக்கானோர் வீதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நாட்டின் இரண்டு பெரிய தொழிற்சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தின் போது, 1,000 இற்கும் மேற்பட்ட கார்களின் அணிவகுப்புடன் போராட்டம் தொடர்ந்தது.

எதிர்ப்பாளர்கள் பாராளுமன்ற கட்டடத்தின் முன் பதாகைகளை ஏந்தியவாறும் சிறந்த ஊதியத்திற்கான கோரிக்கைகளை கோஷமிட்டவாறும் கூடினர்.

பணவீக்கம் இருந்தபோதிலும் குறைந்தபட்ச ஊதியத்தை தற்போதைய நிலையில் முடக்கும் அபாயத்தைத் தவிர்ப்பதற்காக அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை விரைவாக ஏற்றுக் கொள்வதற்கு தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திற்கு ஒரு [illegible] அளித்தன. (4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 21 ½ சூரி 11 செவ் 1 இல்<br>உயரம்:6'<br>தகைமை/ தொழில்: O/L விவசாயம்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13101 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: சூரி 1 செவ் 9 இல்<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில்:சட்டத்தரணி<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்<br>தொ.இ:G/13102 |
| பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா:சூரி 5 செவ் 1 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/ தொழில்: Software Engineer<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம் சைவபோசனம், உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13103 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 1<br>கி.பா:சூரி 3 செவ் 1 இல்<br>உயரம்:5'5"<br>தகைகம்/ தொழில்:முகாமைத்துவம் வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம். சைவபோசனம்<br>தொ.இ:G/13104 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: சூரி 9 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: Software Engineer<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13105 | பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்:சதயம் 1<br>கி.பா: சூரி 6 செவ் 2 இல்<br>உயரம்:153 cm<br>தகைமை/தொழில்:BBM,MBA பிரதம அலுவலகர்<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்.உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/13108 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: சூரி.செவ் 7 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/ தொழில்:BSc சட்டத்தரணி<br>எதிர்பார்ப்பு: படித்த தொழிலுள்ள பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13106 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: சூரி 6 செவ் 7 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/ தொழில்: BSc (Hons) தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: அரச.தனியார் உயர்பதவி<br>தொ.இ: G/13120 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை விடுவிக்க துரித நடவடிக்கை எடுங்கள்

## அருட்தந்தை சக்திவேல்

**(நெளுக்குளம்)**

**தமிழக அரசைப் போன்று தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையான அரசியல் கைதிகளை விடுவிக்க அரசு துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்குடன் தொடர்புபட்டவர்கள் என குற்றஞ்சுமத்தப்பட்டு கடந்த 30 வருட காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்களை இந்தியாவின் உச்ச நீதிமன்றம் அவர்களின் நன்னடத்தை அடிப்படையில் விடுதலை செய்திருப்பதை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு மகிழ்ச்சியோடு வரவேற்று பாராட்டுகின்றது.

இவர்களுடைய விடுதலைக்காகப்பாடுபட்ட தமிழக அரசு உட்பட அனைத்து தரப்பினருக்கும் நன்றியையும் தெரிவிக்கின்றது. இந்த வழக்கின் தீர்ப்பை முன்மாதிரியாக கொண்டேனும் இலங்கை சிறைகளில் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் பலர் ஒப்புதல் வாக்கு மூலமே குற்றவாளிகள் ஆக்கப்பட்டு தண்டனை அனுபவிப்பவர்களாக உள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டும் தமிழக அரசைப் போன்று தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் எனும் குரலுக்கு செவிமடுத்தும் அரசியல் கைதிகளின் நன்னடத்தையை அடிப்படையாகக் கொண்டும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யப்பட அரசு அவசர நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

வடகிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முயலும் அரசு அம்மக்களின் நீண்டகால பிரச்சினைகளில் ஒன்றானதும் அரசியல் பிரச்சினையோடு நேரடி தொடர்புபட்டதுமான அரசியல் கைதிகளின் விடுதலை பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருதல் வேண்டும். அதுவே அரசின் மீதான நம்பிக்கைக்கு வழிவகுக்கும்.

பொருளாதார வீழ்ச்சியடைந்திருக்கும் இந் நேரத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கும் இவ்வேளையில் அதற்கு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை துணை செய்யும் எனத் தெரிவித்தார். (4-299)

# 3 புலி ஆதரவாளர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

(சென்னை)

தமிழ்நாட்டில் பயங்கரவாத செயல்களுக்கு திட்டமிட்டதாகக் கூறப்படும் மூன்று விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் மீது இந்திய தேசிய புலனாய்வு திணைக்களம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

தமிழகத்தில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளான நவீன் என்கிற எம். சக்கரவர்த்தி, ஜே.சஞ்சய் பிரகாஷ் மற்றும் கபிலர் என்ற கபிலன் ஆகியோருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

மே 19 அன்று, சேலம் மாவட்டம், ஓமலூர் பொலிஸ் நிலையப் பகுதியில் வாகன சோதனையின் போது, இரண்டு நாட்டுத் துப்பாக்கிகள், வெடி மருந்துகள் மற்றும் துப்பாக்கிப் பொடிகள் மீட்கப்பட்டன தொடர்பான வழக்கு என என்.ஐ.ஏ தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்டு, அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை நடத்தும் நோக்கத்துடன் புலிகளைப் போன்ற ஓர் அமைப்பை உருவாக்க விரும்பியதாகவும் தெரிவித்துள்ளது. (4)

# படகு கவிழ்ந்ததில் 3 பெண்கள் மாயம்

(கொழும்பு)

படகு கவிழ்ந்ததில் 3 பெண்கள் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படகு சவாரியின் போது ஏற்பட்ட விபத்திலேயே குறித்த படகு கவிழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சூரியவெவ - மஹாவலி கடஹார வாவியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த படகில் 8 பேர் பயணித்துள்ள நிலையில் அதில் 5 பேர் காப்பாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காணாமல் போன பெண்களை மீட்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4)



காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்றது. (படம்-சதீஸ்)

# வவுனியாவில் மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளிய இராணுவப் பேருந்து

(வவுனியா)

வவுனியா புகையிரத நிலைய வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது இராணுவத்தினரின் பேருந்து மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நகரிலிருந்து புகையிரத வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த சமயத்தில் அதே பாதையில் பயணித்துக் கொண்டிருந்த இராணுவத்தினரின் பேருந்து குறித்த மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்து பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4)

# மரக்கறி செய்கை விவசாயிகளுக்கு விவசாய கடன் முறைமை

## யாழ்.மாவட்ட அரச அதிபர் மகேசன்

(அராலி)

யாழ். மாவட்ட மரக்கறி செய்கை விவசாயிகளுக்கும் விவசாய கடன் முறைமை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இது தொடர்பாக விவசாய அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

மாவட்ட விவசாயக் குழுக் கூட்ட கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெற்செய்கை விவசாயிகளுக்கு 40,000 ரூபாவாக இருந்த விவசாயக் கடன் ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை விவசாயிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இந்த வருடம் பெரும்போக நெற்செய்கைக்கான உர விநியோகத்தில் 70% இரசாயன உரமும் 30% சேதன உரமும் தெரிவு செய்யப்பட்டதுடன் மாவட்டத்தில் சேதன உர விநியோகத்திற்காக 7 விநியோகத்தர்கள் தயாராகவுள்ளனர்.



உர விநியோகத்தர்களை இனங்கண்டு அவர்களிடம் உள்ள உரத்தின் தரத்தை உறுதி செய்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

வெள்ள அழிவு, டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகம், நீர் விநியோகம், விவசாயிகளுக்கான கால நிலை தகவல்கள், உருளைக் கிழங்கு செய்கை, திராட்சைப்பழ செய்கையில் காணப்படும் நோய்த்தாக்கம், விதை உற்பத்தி மற்றும் விதை உற்பத்தி ஊக்குவிப்பு நடவடிக்கைகள், பால், முட்டை உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டன. (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு தகுதியானவன்.

– நேதாஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விடுதலை பெற்ற தமிழ் அரசியல் கைதிகள் வாழ்வதற்கு உதவி செய்யுங்கள்

நீண்ட நெடுங்காலம் விளக்கம் விசாரணையின்றி சிறையில் வதைபட்டு தங்கள் வாழ்வின் பெரும்பகுதியை சிறைக்குள் கழித்த தமிழ் அரசியல் கைதிகளின் அவலம் சொல்லி மாளா.

சிறைக்குள் இருந்து கொண்டு தங்கள் விடுதலைக்கு உதவுமாறு அவர்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டங்கள் எத்தனை எத்தனை.

ஆம், அவர்கள் முன்னெடுக்கும் ஒவ்வொரு உண்ணாவிரதப் போராட்டமும் பத்து பதினொரு நாட்கள் எனக் கடந்து, பின்பு அவர்கள் சோர்ந்து மயங்கி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படும்போது நம் அரசியல்வாதிகள் குறிப்பாகத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கைதிகளைப் பார்வையிடச் செல்வர்.

உங்கள் விடுதலை குறித்து அரசாங்கத்துடன் விரைவில் பேசுவோம் என்றும் ஆகையால் உண்ணாவிரத நோன்பைக் கைவிடுங்கள் என்றும் அவர்கள் கோரிக்கை விடுவர்.

அந்தக் கோரிக்கையை நம்பி கைதிகளும் அகிம்சைப் போராட்டத்தை ஒத்திவைப்பர்.

ஆனால், தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பில் சம்பந்தப்பட்ட தமிழ் எம்.பிக்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அப்படியே மறந்து போவர்.

தவிர, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கூடிய எத்தனையோ சந்தர்ப்பங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாய்த்திருந்தது.

ஆனால் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் அதுபற்றி எந்தச் சந்தர்ப்பத்திலும் கருசனை காட்டவில்லை.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தபோது; நீங்கள் ஜனாதிபதியாக வெற்றி பெற்றதும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்.

அப்போதுதான் தமிழ் மக்களின் ஆதரவு உங்களுக்குக் கிடைக்கும் என்று ஒரு வார்த்தை கூறியிருந்தால், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானபோது தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை சாத்தியமாகியிருந்திருக்கும்.

பரவாயில்லை. எல்லாம் முடிந்த கதை. மீளவும் அதனை வாசிப்புக்குட்படுத்துவது கவலையை வலிந்து பெற்றுக் கொள்வதாக இருக்குமேயன்றி வேறில்லை.

ஆனாலும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் செய்த அநீதியை இறைவன் ஒருபோதும் மன்னிக்க மாட்டான் என்பதை நிச்சயம் இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பொதுமன்னிப்பின் கீழ் குறிப்பிட்ட தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையைப் பெற்றுள்ளனர்.

நீண்டநெடுங்காலத்தை சிறைகளில் தொலைத்து விடுதலைபெற்ற இவர்களின் எதிர்கால வாழ்வுக்காக எம் தமிழ்ச் சமூகம் உதவ வேண்டிய கடமைப்பாட்டைக் கொண்டுள்ளது.

அதிலும் குறிப்பாக விடுதலை பெற்ற தமிழ் அரசியல் கைதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில், அவர்களின் கல்வித் தராதரத்துக்கு ஏற்ப ஏதேனும் அரச நியமனம் வழங்கினால் அது அவர்களின் எஞ்சிய காலத்தையேனும் நிம்மதியாக வாழ உதவும்.

ஆகையால் எங்கள் தமிழ் அதிகாரிகள் இது தொடர்பில் இரக்க சிந்தையோடு கவனமெடுக்க வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# தற்போதைய அரசாங்கம் மீது மக்கள் மிகுந்த நம்பிக்கை

## சாகல ரத்நாயக்க

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் காரணமாக இந்த அரசாங்கம் மீது மக்கள்நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக சமூகத்தில் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் பிள்ளைகளின் போசாக்கு நிலையை பாதுகாக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற முடியும் எனவும் ஆனால் அதற்கு குறிப்பிட்ட காலஅவகாசம்தேவை எனவும் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சரியான தொலைநோக்குப் பார்வையின் ஊடாக நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதற்கு உறுதியான கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிக்க வேண்டும் எனத் தெரிவித்த அவர், அதற்குத் தேவையான நடவடிக்கையை ஜனதிபதி எடுப்பார் என்றும் குறிப்பிட்டுள்ளார். (4.7)

## யாழ். போதனாவில் நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனி

### மக்களுக்கும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை 14 ஆம் திகதி நீரிழிவு விழிப்புணர்வுக்காக நாங்கள் உங்களுடன் ஒரு நடை பயணத்தை மேற்கொள்ள இருக்கிறோம். நீங்கள் சுகதேகியாக இந்த நடைப்பயணத்தில் ஈடுபட்டு இறுதியில் எங்கள் விழிப்புணர்வு கருத்தரங்கிலும் பங்கெடுக்குமாறு யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது சூழல் சுகதேகியாக வாழ்வதற்கு பொருத்தமான பிரதேசம். இங்கே மரக்கறிகள், பழங்கள், மீன்கள் போன்ற நல்ல உணவுகள் கிடைக்கின்றன.

ஆனால் சுகேதேகிக்கான உணவினை விடுத்து நோய் ஏற்படக்கூடிய உணவை உண்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். 30, 40 வயதினை அடைகின்ற பொழுது நாம் அவதானமாக இருக்க வேண்டும்.

எந்த உணவு முக்கியம்? ஏன் முக்கியம்? அதனை எவ்வாறு எந்த அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும். என்பதனை நாங்கள் நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நாம் ஒரு நோயாளி ஆகினால் பின் நாளில் பல சிரமங்கள் ஏற்படும். அன்றாட வாழ்வில் பல துன்பங்களை நாம் அனுபவிக்க நேரிடும் என அவர் தெரிவித்தார். (4,7,104)

## சமூக ஊடகங்கள் தொடர்பில் 12,373 முறைப்பாடுகள்

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சமூக ஊடகங்கள் தொடர்பில் 12,373 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர பதிலளிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அவற்றுள் 41 சதவீதமானவை போலி முகப்புத்தக முறைப்பாடுகள் தொடர்பான கணக்குகள் தொடர்பானவை என அந்த பிரிவின் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரவிந்து மீகஸ்முல்ல தெரிவித்துள்ளார்.

கணக்குகள் முடக்கப்பட்டமை தொடர்பில் 16 சதவீதமான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அத்துடன், ஸ்கேம் எனப்படும் மோசடி முறைமை தொடர்பில் 468 முறைப்பாடுகளும், துஷ்பிரயோகங்கள் குறித்து 757 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

கடந்த ஆண்டு 24 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவாகியிருந்தன. (4-7)

## 15 வயது சிறுமியை அடித்துக்கொன்ற இளைஞன்

15 வயது சட்டபூர்வமற்ற மனைவியான சிறுமியை அடித்துக் கொன்ற 27 வயதான கணவரும், மற்றொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் பதினைந்து வயது சிறுமியை சட்டப்பூர்வமாக திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும் புலத்கங்கொட பிரதேசத்தில் அமைந்துள்ள வீட்டில் கணவன் மனைவியாக ஒன்றாக வாழ்ந்து வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 10ம் திகதி இரவு இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது சந்தேகநபர் சிறுமியை கொடூரமாக தாக்கியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (4-7)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் இந்து நாகரிக பேராசிரியர் க. கைலாசநாதகுருக்களின் நினைவுப் பேருரையானது நாளைமறுதினம் 15ம் திகதி மாலை 3.00 மணியளவில் பல்கலைக்கழகத்தின் கைலாசபிள்ளை கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் சமஸ்கிருதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா நினைவு பேருரையாற்றவுள்ளார். (4-7)

## கூட்டங்களை நிறுத்திய பொதுஜன பெரமுன

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆரம்பித்து நடத்தி வந்த "சாம்பலில் இருந்து எழுவோம்" என்ற தலைப்பிலான கூட்டத் தொடர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ், அந்த கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த கூட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன.

தற்போதைய நிலைமையின் அடிப்படையில் அரசியல் கூட்டங்களை நடத்துவது பொருத்தமாக இருக்காது என கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து, கூட்டங்களை தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், கூமரசங்குளம் மாதா கோவிலடி, மகாறம்பை குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

"ஊமையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே, மரங்கள்."

- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு அம்மை தொற்றை எதிர்கொள்ள தயார்

## சுகாதார அமைச்சு

**(கொழும்பு)**

**குரங்கு அம்மை தொற்றை எதிர்கொள்ள அனைத்து பிரிவுகளும் தயார் நிலையில் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**



தொற்றுக்குள்ளானவர்களுக்கான சிகிச்சைகளை வழங்குவதற்காக தேவைப்படும் மருந்துகள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் இவை வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் இதுவரை குரங்கு அம்மை தொற்றுக்குள்ளான இருவர் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் டுபாயிலிருந்து நாட்டிற்கு வருகை தந்தவர்கள் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

IDH மருத்துவமனையில் இவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். (4)

# திரவத் தொற்று நீக்கிக்கான இறக்குமதி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

திரவத் தொற்று நீக்கி தயாரிப்புக்காக பயன்படுத்தப்படும் எத்தனோலுக்கான இறக்குமதி வரியை, முன்னர் போன்று மீளவும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 பரவல் காலத்தில், திரவத் தொற்று நீக்கி தயாரிப்புக்காக, எத்தனோல் இறக்குமதி வரியானது கடந்த 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் மற்றும் ஜூன் 9 ஆம் திகதிகளில் இரண்டு தடவைகள் குறைக்கப்பட்டது.

இந்த நிலையில், குறித்த வரியை மீளவும் அதிகரிப்பதன் மூலம் அரசாங்கத்துக்கு 1.6 பில்லியன் ரூபாய் வரி வருமானத்தை எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், கள் லீற்றர் ஒன்றுக்காக அறவிடப்படும் 25 ரூபாய் மதுவரியை 50 ரூபாவாக உயர்த்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் குறித்த வரி 25 ரூபாவாக குறைக்கப்பட்டது.

எனினும், அதன் இலாபம் நுகர்வோருக்குக் கிடைக்காமையால் மீண்டும் அந்த வரியை அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். (4)

# நீண்டகால விசா வழங்கும் திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையில் வெளிநாட்டவர்களுக்கு நீண்டகால விசா வழங்கும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வு முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தலைமையில் நடைபெற்றது.

சொகுசு அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடுகளை கொள்வனவு செய்யும் வெளிநாட்டவர்களுக்கு நீண்டகால விசா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, வீடுகளை வாங்குபவர்கள் 2 இலட்சம் டொலர் முதலீடு செய்தால் 10 ஆண்டுகள் வரை விசா பெற முடியும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (4)

# புகையிரதத்தில் மோதி இளைஞன் பலி

(கொழும்பு)

புகையிரத வண்டியில் மோதி இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் சென்ற புகையிரத வண்டியில் மோதியே இளைஞன் உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் சித்தாண்டி - முறக்கொட்டான்சேனை தேவபுரம் எனும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்துள்ள இளைஞனின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

# டெங்கு அபாய வலயமாக 7 மாகாணங்கள் அடையாளம்

(கொழும்பு)



நாட்டில் 7 மாகாணங்கள் டெங்கு நுளம்பு பரவும் அதி அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவினால் புதிய அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

மேல் மாகாணம் - கொழும்பு மாவட்டத்தில் பிலியந்தலை, ஹோமாகம, மஹரகம, பிட்டகோட்டே, கடுவெல மற்றும் கொதடுவ ஆகிய பகுதிகள் டெங்கு நுளம்பு பரவும் அதி அபாயம் கொண்ட பிரிவுகளாக பெயரிடப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டம் - அத்தனகல்ல, பியகம, திவுலப்பிட்டிய, ஜா-எல, களனி உள்ளிட்ட 13 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளும் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் அதிகம் கொண்ட இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

களுத்துறை மாவட்டம் - பேருவளை மற்றும் களுத்துறை ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு.

மத்திய மாகாணம் - கண்டி மாவட்டத்தில் 3 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் - 3 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளும் டெங்கு நுளம்பு ப்ரவும் அதி அபாய வலயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வடமேல் மாகாணம் - புத்தளம், கற்பிட்டி, வென்னப்புவ மற்றும் மஹவெவ ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் புதிய அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

ஊவா மாகாணம் - பதுளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவும் சப்ரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டம் - வரக்காபொல சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவும் டெங்கு நுளம்பு பரவும் அதி அபாய வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளன. (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 240 | 200 |
| தக்காளி | 450 | 400 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 160 | 160 | 150 |
| கோவா | 350 | 250 | 320 | 320 |
| கரட் | 300 | 420 | 450 | 500 |
| பூசணி | 150 | 150 | 150 | 200 |
| புடோல் | 260 | 280 | 200 | 280 |
| வாழைக்காய் | 150 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 480 | 400 | 580 | 700 |
| பெரிய வெங்காயம் | 320 | 320 | 320 | 350 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 160 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 200 |
| பயற்றங்காய் | 600 | 450 | 300 | 500 |
| லீக்ஸ் | 300 | 350 | 320 | 350 |
| பீற்றூட் | 180 | 280 | 250 | 300 |
| கறிமிளகாய் | 700 | 700 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 450 | 600 |
| போஞ்சி | 350 | 350 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 450 | 250 | -- | 380 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 150 | 140 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 65 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 200 | 250 | 250 |
| வெங்காயப்பூ | -- | 300 | 350 | 500 |
| முள்ளங்கி | 140 | 160 | 150 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 120 | 120 | 140 |

# சிவப்புச் சீனி இறக்குமதிக்கு அனுமதி கோரும் வர்த்தக அமைச்சு

(கொழும்பு)

உள்நாட்டில் சிவப்புச் சீனி உற்பத்தி செய்யப்பட்டாலும் அதனை இறக்குமதி செய்ய வர்த்தக அமைச்சு நிதி அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனி போது மானதாக இல்லை என்பதனால் அதனை இறக்குமதி செய்ய வேண்டும் என வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது பெலவத்தை, செவனகல, ஹிகுரான மற்றும் கல்ஓயா தொழிற்சாலைகளில் சிவப்புச் சீனி உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆண்டுதோறும் 80 ஆயிரம் மெற்றிக் தொன் சிவப்புச் சீனி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன்...

ஜெயக்குமார், ராபர்ட், ரவிச்சந்திரன் உள்ளிட்ட 6 பேரையும் விடுதலை செய்து உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

இந்நிலையில், வேலூர் ஆண்கள் மத்திய சிறையில் உயர் பாதுகாப்பு தொகுதியில் முருகனும், சாந்தனும் அடைக்கப்பட்டுள்ள நிலையில் சென்னை புழல் சிறையில் ஜெயக்குமார், ராபர்ட் ஆகியோர் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

நளினியின் கணவர் முருகன் மீது வேறொரு வழக்கு வேலூர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் அவரது விடுதலை மட்டும் தாமதமாகும் என கூறப்படுகின்றது. (4-7)

## குழந்தையை...

முன்பாக வெளியாகியது.

காணொலி பதிவு சமூக ஊடகங்களில் வெளியாகியதை கண்டறிந்த வடமாகாண சிறுவர் பராமரிப்பு திணைக்கள அதிகாரிகள் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவித்திருந்தனர்.

ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் குழந்தையின் தந்தையை தேடிய போதும் அவர் தலைமறைவாகி உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாநகர பகுதியில் வைத்து குழந்தையைத் தாக்கிய தந்தை ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

அவரை விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் கூறினர். தாயாருடன் ஏற்பட்ட முரண்பாட்டில் மகளைத் தாக்கினேன். அதனை அலைபேசியில் காணொளி எடுத்தேன்.

அந்த காணொளி மனைவியின் அலைபேசியிலிருந்து அவரது நண்பிக்கு சென்றுவிட்டது. அதுவே வெளியாகி விட்டது என்று சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (4-7,104)

## கோட்டாவுக்கு...

மையில் கோட்டாபய கோரிக்கை விடுத்திருந்ததாக கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியின் வதிவிடம் மற்றும் அலுவலகம் என்பன அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைந்துள்ளன.

அமெரிக்க குடியுரிமை பெற்றிருந்த கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது குடியுரிமையை இரத்துச்செய்தார். நாட்டில் நடந்த எதிர்ப்பு போராட்டங்கள் காரணமாக ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய கோட்டாபய ராஜபக்ஷ, அமெரிக்காவுக்கு செல்ல விசா கோரி விண்ணப்பத்திருந்தார்.

எனினும் அமெரிக்க அவருக்கு விசா வழங்க மறுத்தது. இவ்வாறான நிலைமையில், ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியாக கோட்டாபய ராஜபக்ஷ நியமிக்கப்பட்டால், அவருக்கு மீண்டும் அமெரிக்காவுக்கு செல்லும் வாய்ப்பு கிடைக்கும்.

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியாக தற்போது முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் கடமையாற்றி வருகிறார். (4-7)

## அனைத்து பேரு...

ரின் உதவியுடன் சகல பேருந்துகளின் வழி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம், சாரதியின் மருத்துவ அறிக்கை போன்ற ஆவணங்கள் பரிசீலிக்கப்படும். (4-7)

## பிளேட்டால்...

கல்விபயிலும் மாணவனே இவ்வாறு கையை வெட்டியமை தெரியவந்துள்ளது.

போதைக்கு அடிமையாகியதாலேயே இவ்வாறு தனது கையை குறித்த மாணவன் வெட்டியுள்ளார் என தெரியவந்துள்ளது. (4-7)

## நாட்டை நாச...

கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டை பொருளாதார ரீதியாக வங்குரோத்தாக்க முன்னின்ற ராஜபக்ஷர்களுடன் இணைந்து நாட்டின் பொருளாதாரத்தை சூறையாடிய முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் 'பொருளாதார கொலையாளிகளுக்கு மத்தியில்' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

மறுபுறம் இந்நாட்டில் ஜனநாயகப் போராட்டத்துக்காக வீதியில் இறங்கிய சங்கைக்குரிய சிறிதம்ம தேரர், வசந்த முதலிகே ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இது ஒரு விசித்திரமான நிலை. நாட்டு மக்கள் தற்போது தேர்தலொன்றையே கோருகின்றனர் எனவும் அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## ஜனாதிபதியுடன்...

தாக கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

எனினும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை முழுமையாக நிறைவேற்றும் வகையிலேயே தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4-7)

## நாட்டை...

திட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை பொருளாதார ரீதியில் மீளக் கட்டியெழுப்புவதற்கான தொடர்ச்சியான நடுத்தர மற்றும் நீண்டகால முன்மொழிவுகள் வரவு-செலவுத் திட்டத்தில் இருக்கும் என சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டினார்.

அதிகரித்து வரும் பொருட்களின் விலைகள் மற்றும் பணவீக்கத்திற்கு முகங்கொடுத்து வெற்றிகரமாக வாழ்க்கையை நடத்துவதற்கு பாடுபடும் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் நலன் சார்ந்த முன்மொழிவுகளுடன் கூடிய வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்குமாறு ஜனாதிபதி ஏற்கனவே அனைவருக்கும் ஆலோசனை வழங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்தார்.

அரசின் வருவாய் வெகுவாக குறைந்துள்ள இந்த நேரத்தில், மாநில வருவாயை அதிகரித்து, அரசின் செலவினங்களை முடிந்தவரை குறைத்து பயனுள்ள நல மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் பட்ஜெட்டில் முன்மொழியப்படும். அரச நிறுவனங்களின் தற்போதுள்ள பலவீனங்கள் தொடர்பில் புரட்சிகரமான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி, திறைசேரியைச் சார்ந்துள்ள நிறுவனங்களை அந்த நிலைமையிலிருந்து விடுவிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(4-7)

## அரசியல்...

அண்மையில் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளிற்கு லைகா நிறுவன உரிமையாளர் நிதியுதவியளித்துள்ளார்.

பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் அண்மையில் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

கிட்டத்தட்ட இளமைக்காலம் முழுவதையும் சிறையில் கழித்த இந்த அரசியல் கைதிகளிற்கு லைகா நிறுவன உரிமையாளர் நிதியுதவியளித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹொட்டலில் குறிப்பிட்ட அரசியல் கைதிகளிற்கு மதிய போசனமளித்து, நிதியுதவுயமளித்தார்.

இதேவேளை, 8 தமிழ் அரசியல் கைதிகளிற்கும் தலா ரூ.25 இலட்சம் ரூபா வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (4-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

### மஹஜன சம்பத

திகதி 2022/11/12
சீட்டிழுப்பு இலக்கம் 4937
ஆங்கில எழுத்து H வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 4 8 7 8 0
தேசிய லொத்தர் சபை

### ஹந்தஹன (HANDAHANA)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.12
சீட்டிழுப்பு இலக்கம் 246
வெற்றி இலக்கம்: கன்னி; வெற்றி இலக்கங்கள் 15 27 39 61; கன்னி
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 12/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1285
வெற்றி எழுத்து O; சுப்பர் இலக்கம் 09; வெற்றி இலக்கங்கள் 13 40 42 61

### கொவிசெத

திகதி 2022.11.12
சீட்டிழுப்பு இலக்கம் 3179
ஆங்கில எழுத்து K; வெற்றி இலக்கங்கள் 22 28 37 47
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி -2022.11.12
சீட்டிழுப்பு இலக்கம் -967
ஆங்கில எழுத்து S; வெற்றி இலக்கங்கள் 22 63 72 77

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 12/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1392
வெற்றி இலக்கங்கள்: கடகம் 3 8 1 8 5 6
தேசிய லொத்தர் சபை

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1738
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2022.11.12
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,556,220/-
வெற்றி இலக்கங்கள் 01 11 31 66; ஆங்கில எழுத்து F

### சனிதா

சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.12
சீட்டிழுப்பு இல : 4073
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,600,560/-
வெற்றி இலக்கங்கள் 28 32 42 56; ஆங்கில எழுத்து P

### ராசி (Rasi)

சுப்பர் ஜக்பொட் ரூ. 4,606,962.40
திகதி 2022-11-12
வெற்றி வாரம் 3624
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 19 21 36 62; மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,227,920/-

### சங்வர்தன வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 544; திகதி 2022-11-12; வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து B; வெற்றி இலக்கங்கள் 02 28 54; விதி எண் 07
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 14,166,928/-
தொ. பே.: 0112 335 546/47
Web: www.dlb.lk

### லக்கி 7

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 37 16 36 39 40
சீட்டிழுப்பு வாரம் 1088; வர்ணம் சிவப்பு; திகதி 2022.11.12 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 276,757,031.80
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1912; நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.11.12; தினம் சனிக்கிழமை
E 22 42 46 58
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,620,380/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு "Water Proofing"

மழைக் காலத்தில் உங்கள் கட்டடங்கள் கூரைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை எங்களிடம் இரசாயனப் பொருட்களை பெற்று எமது தொழில்நுட்ப உதவியுடன் நீங்களே சீர்செய்து கொள்ளலாம்.

FINEX

போலிகளைக் கண்டு ஏமாற வேண்டாம்

1 சதுர அடி 150/= இருந்தும் ஏன் கூடுதலாக செலுத்த வேண்டும்?

இரும்புக் கம்பிகளிலுள்ள துருப்பிடித்தலை அகற்றுவதற்கான இரசாயனப் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.
உலகத் தரமிக்க இரசாயனப் பொருட்களை ஏக விநியோகஸ்தர் ஆகிய எம்மிடம் விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள் (13428)

North & East Engineering
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northand east engineering.com



## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (13314)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.
TP: 077 780 3970, 074 007 1970



## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு கோண்டாவில் ஸ்ரேசன் வீதியில் கோண்டாவில் மகா வித்தியாலயம் அருகில் 1 1/2 பரப்புக் களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு. (13443)

077 728 6061



## சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

நியூசிலாந்து, கனடா அவுஸ்திரேலியா, லண்டன் போன்ற நாடுகளிற்கு சுற்றுலா விசா தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

Hybrid International Hub (Pvt) LTD (13440)

076 250 0098



## ஊர்க் கோழிக் குஞ்சுகள்

1 நாள் ஊர்க் கோழிக் குஞ்சுகள், 2 1/2 மாத கினிக் கோழிக் குஞ்சுகள், இறைச்சிக் காடைகள் விற்பனைக்கு

தொடர்பு (13426)

077 332 2433



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகருக்கு அண்மையில் இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.
யாழ். புறநகர் பகுதி விரும்பத்தக்கது. (13438)

077 635 4224



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதி சீரடி சாயிபாபா ஆலயத்தில் இருந்து 80m தூரத்தில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது.
தரகர் தேவையில்லை. (13435)

076 105 6343
077 261 4549



## ஜெயக்குமார் திருமண சேவை

(மல்லாகம்)

1992 Dr, யேர்மன், மணமகளுக்கு தகுதியுடைய மணமகன் தேவை.
1983 - 1995 வயது வரை உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
கலாச்சாரத்துக்கு அமைய இலங்கை, ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா நாடுகளில் ஒழுங்கு செய்து தருவோம். (13441)

076 475 2219,
075 535 3239 viber,
004917643399372
German Whats App
077 535 3289



## வேலையாட்கள் தேவை

யாழ். கன்னாதிட்டி சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற நிறுவனம் ஒன்றிற்கு உயர்தரம் கற்ற பெண் ஊழியர் தேவை.
அடிப்படைக் கணனி அறிவு அவசியமானது.

தொடர்பு (13429)

077 405 5995



## SAM LANKA

DIRECT IMPORTERS & DISTRIBUTORS

NO:- 367 NAVALAR RAOD, ILLUPPAIYADY JUNCTION, JAFFNA

021 222 1002 ,
0094 777 46 58 48,
0094 778 20 94 24

SAM LANKA
25% OFF
VALID TILL 30th NOVEMBER 2022

KEVILTON — SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS, LED LIGHTS, LED PANEL LIGHTS

ORANGE ELECTRIC — SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS, LED LIGHTS, LED PANEL LIGHTS

wireman — ALL KINDS OF LED LIGHTS

Panasonic — ALL KINDS OF LED LIGHTS

AKRA — ALL KINDS OF LED LIGHTS

(13397)



## அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான றோயல் நெய்

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான **றோயல் நெய்** கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.



Packed By:-
Royal Industries®
Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 567

குறிப்பு: யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (C-5249)



## STUDY IN CANADA

Your pathway to Canadian Permanent Residence

INFO. & APPLICATION SESSION
SATURDAY 19TH NOVEMBER 2022
10:00 AM TO 5:00 PM
HILTON COLOMBO (Moonstone Room)

WALK-IN FOR FREE CONSULTATION
FOR MORE INFORMATION CALL US ON
0777 761 346

GET PLACED INTO THE TOP UNIVERSITIES & INSTITUTIONS IN CANADA
ENTRANCE FREE! (C-1849)

Canada Visa Refused ?
Don't Lose hope! Call or Visit Us

flex Institute
Level 12, Parkland Building,
No. 33 Park Street, Colombo 02, Sri Lanka.
E-mail: flexinstitute04@gmail.com
10 Years of Trusted Services
flexinstitute www.flexinstitute.lk



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை (13439)

தொடர்புகளுக்கு - ஜெயம்
077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.